பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 01 திங்கட்கிழமை 15.01.2024 கதிர் 429

# பௌத்தத்திற்கு எதிரான குழுக்கள் மீது நடவடிக்கை கோரும் மகாநாயக்கர்கள்

## ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்து

பௌத்த மதம் தொடர்பாக தவறான சித்தாந்தங்களைப் பரப்பி, பௌத்த தத்துவத்திற்கும் அதன் கலாசார விழுமியங்களுக்கும் தீங்கு விளைவிப்பதாகக் கூறும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். .

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர்கள் அனுப்பியுள்ள கூட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பௌத்த மதத்தை அழிக்க முற்படும்இவ்வாறானநபர்களின் செயற்பாடுகளை வெறும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலங்கையின்இருபெரும்கோடீஸ்வர வர்த்தகர்கள் குறி வைத்துள்ளனர். அவர்களில் ஒருவர் பொது ஜன பெரமுனமூலம் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளவரான தம்மிக்க பெரேரா மற்றையவர் திலித் ஜயவீர. இவர்கள் இருவருமே ராஜபக்சக்களுக்கு நெருக்கமானவர்கள்.

தம்மிக்க பெரேராவை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது பதவிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக்கிப் பின்னர் அமைச்சரும் ஆக்கினார். கடந்த ஆண்டு நடந்த பெரமுன கட்சியின் தேசிய மாநாட்டில் அவர் முன் வரிசையில் ராஜபக்சக்களுக்குச் சமமாக அமர ☞ 2

## பால்மா விலை அதிகரிக்கும்

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அடுத்த வாரம் முதல் அதிகரிக்கப்படும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் அங்கதவரான அசோக பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 400 கிராம் பால்மாவின் விலை 30 ரூபாவினால்அதிகரிக்கப்படவுள்ளதோடு ஒரு கிலோகிராம் பால்மாவின் விலை 75 ரூபாவினாலும் ☞ 2

# சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த பொங்கல் வாழ்த்து தமிழர்களுக்கு

## ஜனாதிபதி தெரிவிப்பு

தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உழவர் திருநாளான தைத்திருநாள், மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ளதமிழ்ச்சமூகத்தால் கொண்டாடப்படும் ஒரு செழிப்பான அறுவடைத் திருவிழாவாகும்.

வளமான அறுவடையையும், புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையையும் தைப்பொங்கல் திருநாள் குறிக்கிறது. தமிழ் நாட்காட்டியின்படி தை மாதத்தில் சூரியன் வடக்குக்குநகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாகதைத்திருநாள் அமைந்துள்ளது.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்குமுன்பாக சோழர்களின் ஆட்சிக் காலத்தில் வருடத்தின் முதலாவது அறுவடைக் காகதைப்பொங்கல் ☞ 2



## பொங்கல் வாழ்த்து

வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர். தமிழர் திருநாளாம் இந்தத் தைத் திருநாளில் பிறக்கும் இந்த ஆண்டு அனைவருக்கும் இன்பம் நிறைந்த ஆண்டாக காலைக்கதிர் மனமார வாழ்த்துகின்றது.

# பிரதமரும் தைத்திருநாள் வாழ்த்து

தைப்பொங்கல் பண்டிகையானது விவசாயபாரம்பரியத்தின் அடிப்படையில் அமைதி, ஒற்றுமை மற்றும் அன்பு ஆகிய அடிப்படைப் பெறுமானங்களை உள்ளடக்கியது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வளம்நிறைந்தபுத்தாண்டின்விடியலைக்குறிக்கும் தைத் திருநாளைக் கொண்டாடும் உலகெங்கிலும் வாழும் மக்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன வாழ்த்துக்களைதெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

இந்து ☞ 2

## உலகின் முதல் தர நாடாக மாறுவதற்கான

# புதிய பயணத்தில் இணைய வருமாறு சஜித் பொங்கல் வாழ்த்தில் அழைப்பு

உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதியபயணத்திலும்புதிய மாற்றத்திலும்இணைந்து கொள்ளுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களுக்குப் பொங்கல் தினத்தில் அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச.

தைப்பொங்கலை முன்னிட்டுவெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.அவர் மேலும்தெரிவித்ததாவது:

இலங்கைவாழ் மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்து மக்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாக பக்தியுடனும் மரியாதையுடனும் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் தொடர்பில் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதையிட்டு மிகுந்தமகிழ்ச்சிஅடைகின்றேன்.

மானுடவளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நாம் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிறோம். உலகிற்கு உயிர் கொடுக்கும் சூரிய பகவானை வழிபடுவது பண்டைய காலத்திலிருந்தே நடந்து வருகிறது. தைப்பொங்கல் பண்டிகை இந்த சூரிய பகவான் மீதுள்ள அபரிமிதமான ☞ 8

# மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு மீண்டும் கொலை அச்சுறுத்தல்

## அவரே தெரிவிப்பு

எனக்கு மீண்டும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

அவிசாவளையில் நேற்றையதினம் யுக்திய நடவடிக்கை தொடர்பில் சமூக பொலிஸ் குழுவினரைத் தெளிவுபடுத்தும்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்டுக்கு ☞ 8

# மாற்றத்தில் கைகோர்க்க வரும்படி அனுரகுமார திஸநாயக்க அழைப்பு

தேசிய மக்கள் சக்தி தலைமைத்துவம் வழங்கும் தேசிய மாற்றத்தில்அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் நேற்றைய பொதுமக்கள் சந்திப்பொன்றில்உரையாற்றிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

நாட்டின்தற்போதைய நிலைமையைப் பாருங்கள், எதிர்கால சந்ததியாகவுள்ளகுழைந்தகளுக்கு முழுமையாக உணவளிக்க முடியாத நிலைமைகள் உள்ளன. சாதாரணமக்கள்மூன்று வேளைகள் உணவை உண்ணுவதற்கு இயலாத நிலைமைகள் உள்ளன.வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிச்செல்கின்றார்கள், புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். இளைஞர்கள், யுவதிகள் இந்த நாட்டின் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையற்றுப் போயுள்ளனர். ☞ 8

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிடவேமாட்டார்

## துஷான இந்துனில் எம்.பியின் கணிப்பு இது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்பது உறுதியான விடயமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்துஷாரஇந்துனில் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற ☞ 8

# சஜித் கட்சியின் அரைப் பங்கினர் ஐ.தே.க. பக்கம் தாவுவார்களாம்

எதிர்வரும்நாட்களில் ஐக்கியமக்கள்சக்தியின் அரைப்பங்கினர் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.வுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் பீ.ஹரீசன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ☞ 2

# பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லை அவர்களின் வாழ்வே போராட்டம்தான்

## தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கருத்து

நாம் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நாட்டிலேயே வாழ்கிறோம். இறந்த பெண்மணிக்கு கல்லறைகளுக்குக்கூட பாதுகாப்பில்லாத நிலை உருவாகியிருக்கிறது. பெண்களின் வாழ்க்கை போராட்டக்களமாக மாறியிருக்கிறது என்று தெரிவித்தார் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விராய் கெலில் தஸார் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் ☞ 2

## ஊழல், மோசடி அரசியல்வாதிகளை தவிர்த்து

# தமது தலைமையை இலங்கையர் சிந்தித்து தெரிவு செய்யவேண்டும்

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அறைகூவல்

ஊழல், மோசடிகள் மிக்கஅரசியல்வாதிகளை தவிர்த்து, சிறந்தவொரு தலைவரை தெரிந்தெடுத்து ஆட்சியை வழங்கவேண்டும். அதற்காகமக்கள்சிந்தித்து தமது தலைமையைத் தெரிவுசெய்யவேண்டும் என்றுபேராயர்கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

வைக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிடுவதற்குத்தான் முன்வந்திருக்கிறார் என்பதை அவர் அறிவித்தார்.

அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவேண்டுமாயின் நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகள் என்று குறிப்பிட்டு 10 விடயங்களைக் கட்சி அறிவித்தது. அவற்றை நிறைவேற்றுவதில் தான் மும்முரமாக இருக்கிறார் என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

திலித் ஜயவீர கோடீஸ்வர வர்த்தகர் என்பதுடன் தெரண ஊடகக் குழுமத்தின் சொந்தக்காரரும்கூட. கோட்டாபய ராஜக்சவை ஜனாதிபதியாக்கியதில் இவரது ஊடகக் குழுமத்திற்குப் பெரும் பங்குண்டு என்பது வெளிப்படையானது. இவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு கோட்டாவிற்கு ஆசை இருந்தது. ஆனால், ஜனாதிபதியாக எல்லாவற்றையும் சொத்தப்பி நாட்டைவிட்டே தப்பியோடவேண்டிய சூழலை அவர் ஏற்படுத்திய நிலையில், அவரது பரிந்துரையை கட்சிக்குள் மதிப்பதற்கு ஆள் இல்லாத நிலையில் திலீத் சொந்தமாக ஒ-ரு கட்சியை வாங்கிக்கொண்டார். அதன் ஊடாக அவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

இப்போது பிரச்சினை அவர்கள் போட்டியிடுவதில்லை. வர்த்தகர்கள் தேர்தலில் போட்டியிடுவதும் தமக்குச் சவாலாக நிற்பதும் அரசியல்வாதிகளுக்குப் பிடிக்கவில்லை. தமக்கு ஆதரவாக பணத்தை அள்ளிச் செலவிட்டுக்கொண்டு அரசியல் பின்புலத்தில் வர்த்தகர்கள் இருக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னவோ...!

சுதந்திரக்கட்சியைச்சேர்ந்தவரும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்ததான் இப்போது வர்த்தகர்கள் ஜனாதிபதியாக விரும்பித் தேர்தலில் போட்டியிடுவதை வாங்கு வாங்கு என்று வாங்கியிருக்கிறார்.

''வியாபார நிறுவனங்களை நிர்வாகம் செய்தவர்கள், அரச நிர்வாகத்தினை இலகுவாகச் செய்ய முடியும் என்று கற்பனை உலகில் சஞ்சாரிப்பதை நிறுத்தவேண்டும். அரச நிர்வாகம் என்பது முற்றிலும் மாறுபட்டதொன்று'' என்று அவர் சீறியிருக்கிறார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இப்படிச் சீறினார்.

''தற்போது ஜனாதிபதிக் கனவில் பலர் இருக்கின்றார்கள். அவர்களில் சிறந்த வியாபாரிகளும் போட்டியிடுவதற்கு முன்வருகின்றார்கள். அவர்களுக்கு ஆகக் குறைந்தது நகரசபையின் அரச நிர்வாகம் எப்படிப்பட்டது என்பதுகூடத் தெரியாது.

வியாபார நிர்வாகம் என்பதும், அரச நிர்வாகம் என்பது முற்றிலும் மாறுபட்ட இருவேறு விடயங்கள். சிறந்த வியாபார நிர்வாகிகள் என்பதற்காக அரசினை இலகுவாக நிர்வகிக்கலாம் என்று கருதுவது பொருத்தமற்றது. ஆகவே, அவர்கள் விசப் பரீட்சையில் ஈடுபடுவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன்" என்றார் அமைச்சர்.

அரசியல்வாதிகளில் பலர் பதவிக்கு வந்ததும் ஊழல், மோசடி மூலம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு வர்த்தகர்களாகவும் முதலீட்டாளர்களாகவும் மாறும் போது, ஏன் வர்த்தகர்கள் மட்டும் சிறந்த அரசியல்வாதிகளாக, நாட்டின் நிர்வாகிகளாக மாறக்கூடாது...? பணத்தைக்கொள்ளையடிப்பதற்காக அரசியல்வாதியாகி பின்னர் வர்த்தகர்கள் ஆவதைவிட பணம் இருப்பவர்கள் அரசியல்வாதியானால் அவர்கள் மேலும் பணம் சம்பாதிப்பதை நிறுத்தி மக்களுக்காக ஏதாவது செய்ய முயற்சிப்பார்கள் என்றும் எடுத்துக்கொள்ளலாமே....! இலங்கையர்களின் விதி வலியது என்றால் வர்த்தகர்கள் நாட்டின் தலைவர்களாகி மேலும் கொள்ளையடிப்பதையும் நாட்டைச் சூறையாடுவதையும் யாரால்தான் தடுக்க முடியும்...

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பௌத்தத்திற்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்களாகக் கருத முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது. இதன் மூலம், மதத்தின் உன்னத விளக்கத்தை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நிகழ்வுகளை தனிமைப்படுத்தி தீர்வு காண முற்படுவதைவிடுத்து, அவ்வாறான தர்மத்தைதடுப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை தயார் செய்ய வேண்டிய தருணம் இதுவாகும்.

சமூகத்தில் மீண்டும் மீண்டும் நிகழும் 'பௌத்த சாசனச் சிதைவுகளுக்கு' இடமளிக்க கூடாது என்பதோடு சமூக ஊடகங்களில் இவ்வாறான கருத்துக்களை பரப்பி பௌத்த சமூகத்தை தவறாக வழிநடத்தி சமூக சீர்கேட்டை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாக தயாரிக்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் 'புத்தசாசனத்தின் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ள' ஜனாதிபதி உடனடி கவனம் செலுத்துமாறு கோருகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது மக்கள் விடுதலை முன்னணி தங்களிடத்தில் தலைமையை ஒருதடவை ஒப்படைத்துப் பார்க்குமாறு கோருகின்றார்கள். ஏலவே 69இலட்சம் மக்கள் வாக்களித்து கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒருதடவை ஆட்சியை ஒப்படைத்தமையால்தான் நாடு பதாளத்துக்குள் சென்றது.

மீண்டும், ஒருதடவை மக்கள் முன்னணி கோருகின்றது என்பதற்காக நாங்கள் அவ்வாறான செயற்பாட்டை செய்வதற்கு இடமளிக்க முடியாது. பொதுமக்கள் இந்த விடயத்தில் விழிப்பாகச் செயற்பட வேண்டியுள்ளது.

மீண்டும், நாட்டில் மோசமான பொருளாதார நிலைமைகள் ஏற்பட்டால் அதனை சீர்செய்வது மிகக் கடினமான காரியமாகிவிடும். ஆகவே தற்போது நாட்டை மீட்டெடுக்கும் கடினமான போராட்டத்திற்குத் தலைமை வழங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் தோளோடு தோள் நிற்க வேண்டியுள்ளது.

சஜித் பிரேமதாச ஜனாதிபதிக் கனவில் உள்ளார். ஆனால் அவர் சவால்களைப் பொறுப்பேற்பதற்கு பயந்தவராக உள்ளார். அவருடைய நிலைமையானது, ஆசைகள் நிறைந்ததாக இருந்தாக இருந்தாலும் அவரிடம் பயமும் உச்சமாக உள்ளது.

இதனால், அவருடைய அணியில் இருக்கும் அரைப்பங்கினர் அடுத்த சொற்ப காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர். அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்துக்கு சக்தியளிக்கவுள்ளனர் என்றார்.

## பால்மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்படவுள்ளது.

வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்தத் தீர்மானத்தினை எடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, புதிய விலைகளுடனான பால்மா விற்பனை சந்தையில் விரைவில் அமுலாக்கப்படும் என்றார்.

## சுபீட்சமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிகை கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

அறுவடையின் செழுமைக்கு வித்திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்ட அனைத்துக்கும் மனதார நன்றி கூறுவதே பண்டிகையின் நோக்கமாகும். இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது.

வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம். விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசு தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

அந்த அனைத்து பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசிர்வாதம் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கிறோம். அதேபோல் தைப் பொங்கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பையும் போதிக்கிறது.

அதற்கமைய நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்கு ஒருதாய் மக்களாக முன்னேற்றம் அடைய வேண்டும் என அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்ளும் அதேநேரம், தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என்றார்.

## பிரதமரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரத்தின் மேன்மையை வெளிப்படுத்தும் தேசிய பண்டிகையான தைப்பொங்கல் பண்டிகையானது விவசாய பாரம்பரியத்தின் அடிப்படையில் அமைதி ஒற்றுமை மற்றும் அன்பு ஆகிய அடிப்படைப் பெறுமானங்களை உள்ளடக்கியுள்ளது. இயற்கையோடு இயைந்த பாரம்பரிய வாழ்வொழுங்கின் மீது நம்பிக்கை கொண்ட தமிழ் விவசாயிகள்

சிறந்த விளைச்சலை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் இந்த அறுவடைத் திருவிழா தேசத்தின் உயிர்நாடியின் பிரதிபலிப்பாக அமையும்.

இது தற்போதைய சூழ்நிலைகளுக்கு மத்தியில் உணவுப்பாதுகாப்பு மற்றும் கிராமிய மறுமலர்ச்சி என்ற எண்ணக்கருவுக்கு சிறந்ததோர் உந்து சக்தியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வளம் நிறைந்த புத்தாண்டின் விடியலைக் குறிக்கும் தைத் திருநாளைக் கொண்டாடும் உலகெங்கிலும் வாழும் மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள் என்றுள்ளது.

## தமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்,

கொழும்பு பொரளை அனைத்து புனிதர் தேவாலயத்தில் 2022ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீட்கப்பட்டதோடு அங்கு பணியாற்றியவர்கள் பயங்காரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று நடைபெற்ற வழிபாடுகளில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அன்று கைக்குண்டு வெடிக்காத நிலையில் இந்த தேவாலயத்தில் இருந்து மீட்கப்பட்டது. அதனை வெடிக்கச் செய்வதை நோக்கமாக கொண்டே இந்த ஆலயத்தில் கொண்டுவந்து வீசியிருக்கின்றார்கள். அதிஷ்டவசமாக அது வெடித்திருக்கவில்லை. ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டதன் பிரகாரம் அந்தச் சம்பவம் நிகழவில்லை.

சி.சி.டி.வியை பரிசோதனை செய்யாது, பொலிஸார் தேவாலயத்தில் இருந்த மூவரையும், வழிபடுவதற்கு வந்த ஒருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். ஆனால் நாங்கள் சி.சி.டி.வியைப் பார்த்தபோது, அதில் பொலித்தீன் பையில் ஒருவர் கைக்குண்டை கொண்டு வருவதையும், அவர் தேவாலயத்தினுள் அதனை வைப்பதையும் அடையாளம் காண முடிந்தது. அந்த நபரை இதுவரையில் பொலிஸார் கைது செய்யவில்லை.

கைக்குண்டை வைத்து அல்லது வெடிக்கச் செய்வதன் மூலமாக, எமது பேரணியை நிறுத்துவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இந்த நாட்டின் பெரும்புள்ளியொன்று எமது பேரணியை நிறுத்துவதற்கான செய்தியை வழங்கும் பொருட்டு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலே அதுவாகும்.

இன்னமும் அந்தப் பெரும்புள்ளி நாட்டில் உள்ளது. ஆனால் பொலிஸார் அந்தப் புள்ளிக்கு அண்மித்துசெல்லக்கூட மாட்டார்கள். எமக்கு இந்தச் சம்பவம் தொடர்பில் இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

இந்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகும். ஆகவே நாம் இவ்விதமான ஊழல், மோசடிகள் மிக்க அரசியல்வாதிகளை தவிர்த்து, சிறந்தவொரு தலைவரை தெரிந்தெடுத்து ஆட்சியை வழங்கவேண்டும். அதற்காக மக்கள் சிந்தித்து தமது தலைமையைத் தெரிவு செய்ய வேண்டும் என்றார்.

இதனையடுத்து தேவாலயத்திற்கு முன்பாக, குறித்த சம்பவத்துக்கு நீதிகோரி கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தின் பின்னர் கருத்து வெளியட்ட கார்தினல், அரசாங்கத்தின் விருப்பபடி பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள நபர், இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## விடுமுறை

இன்று தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு நாளை காலைக்கதிர் பத்திரிகை வெளிவராது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் வழக்கம்போன்று பத்திரிகை வெளிவரும்.

## பெண்களுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற, 'பெண்களாகிய நாம் ஒரே மூச்சுடன் திசைகாட்டிக்கு' என்ற தொனிப்பொருளிலான பெண்கள் மாநாட்டில் உரையாற்றிபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நாட்டிலேயே வாழ்கிறோம். இறந்த பெண்மணிக்கு கல்லறைகளுக்குக்கூட பாதுகாப்பில்லாத நிலை உருவாகியிருக்கிறது. பெண்களின் வாழ்க்கை போராட்டக்களமாக மாறியிருக்கிறது. தினமும் பெண்கள் எதிர்கொள்ளும் பெரும்போராட்டம் தான் சமையலறை போராட்டம். விலைவாசியை தாங்கிக்கொள்ள முடியாமல் பெண்கள் கஸ்டப்படுகிறோம். இன்று ஒரு கிலோ கிராம் கரட் 1100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 400கிராம் பால்மா பக்கற் ஒன்று 30 ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. தாய்மார்கள் தமது பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியாத நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

உணவுக்கு செலவழித்தால் கட்டணங்களை செலுத்த முடியாது. கட்டணங்களை செலுத்தினால் உணவுக்கு எதுவும் மிஞ்சாது. சாதாரண தாயொருவர் தனது பிள்ளையை வாரத்தில் 2 அல்லது 3 நாட்களுக்கே பாடசாலைக்கு அனுப்புகிறார். நாட்டை போலவே பெண்களும் கடன்காரர்களாக மாறியிருக்கிறோம்.

அனேகமான பெண்களின் தங்க நகைகள் அடகு கடைகளில்தான் உள்ளன. கடந்த 2023 ஆம் வருடமென்பது தங்கக்கடன் அதிகம் பெற்ற வருடமாக மாறியிருக்கிறது. 2024 இல் வரிச்சுமை மேலும் அதிகரித்திருக்கிறது. ஆனால், எமது வரியில் இந்நாட்டில் நெருக்கடியை உருவாக்கிய, கொள்ளையடித்த, மோசடி புரிந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ராஜபக்ஸர்களின் அரசாங்கத்தை நாம் பேணிவருகிறோம். ஆனால், பெண்களாகிய எமக்கு எவ்வித விமோட்சனமும் கிடைக்காமல் இருக்கிறது என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் விருப்பப்படியே அமைய வேண்டும்

## அதுவே எனது நிலைப்பாடு என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

மக்களின் விருப்பங்களின் அடிப்படையிலேயே அபிவிருத்திதிட்டங்கள் அமையவேண்டும்என்பதே தன்னுடைய நிலைப்பாடு என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்திற்கான இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர், மன்னார் மாவட்டசெயலகத்தில்இடம்பெற்றதிணைக்களங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னாரில் மேலும் காற்றாலைகள் அமைப்பது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு பதில் அளித்த அமைச்சர் –

குறித்த காற்றாலைகள் அமைக்கப்படுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் மற்றும் அமைக்க வேண்டிய அவசியம் தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி தெளிவுபடுத்தியிருந்தார்.

அதன்போது மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் மௌனமாகவே அமர்ந்திருந்தனர். ஜனாதிபதியுடனான புரிந்துணர்விற்கு பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அமைதியாக இருந்தார்களா அல்லது குறித்த திட்டத்தை ஏற்றுக்கொண்டு அமைதியாக இருந்தார்களா என்பதை அவர்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் மக்களின் விருப்பங்களும் நலன்களுமே முக்கியமானது. எனவே ஒவ்வொரு திட்டங்களாலும் மக்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பாதிப்புக்கள் தொடர்பாக




ஆராய்ந்தே முடிவுகளை எடுப்பேன். – என்று தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புகுழுவின்தலைவருமானகுலசிங்கம் திலீபன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் தலைமன்னார் பங்குத்தந்தையும் மன்னார் பிரஜைகள் குழு தலைவருமான மார்க்கஸ் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# ராணுவ ஊடகப் பணிப்பாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் கே.ஏ.என் ரசிக்க குமார

இராணுவ பொறியியல் படையணியின் மேஜர் ஜெனரல் கே.ஏ.என் ரசிக்க குமார இராணுவ ஊடக மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.



மேஜர் ஜெனரல் கே.ஏ.என் ரசிக்க குமார 1990இல் இலங்கை இராணுவத்தில் இணைந்து 1991இல் பாகிஸ்தான் இராணுவ கல்வியியற் கல்லூரியில் பயின்று இரண்டாம் லெப்டினனாக அதிகாரவாணை பெற்றார்.

அணி தலைவர் பாடநெறி, அதிகாரிகளின் தனிசிறப்பு பாடநெறி, படையணி புலனாய்வு அதிகாரி பாடநெறி, களப் பொறியியலாளர் பாடநெறி, படையணி கணக்காளர் பாடநெறி, படையணி நிர்வாக அதிகாரி பாடநெறி, இராணுவக்கட்டளைமற்றும் பணிநிலைபாடநெறி, தேசிய பாதுகாப்பு கல்லூரி கற்கை (தேசிய பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகள்), இளம் அதிகாரிகள் பாடநெறி – இந்தியா, போர் பொறியியல் பயிற்றுவிப்பாளர் பாடநெறி – இந்தியா, இராணுவ கட்டளை மற்றும் பணிநிலை பாடநெறி – சீனா மற்றும் கண்ணி வெடி மற்றும் வெடி பொறியியல் பாடநெறி – சீனா. ஆகிய பல்வேறு பாடநெறிகளை பயின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெளிநாடு சென்ற மகளின் நிலை பற்றி விசாரிக்கச் சென்ற தாய் மீது தாக்குதல்

## வெளிநாட்டு முகவர் நிலைய ஊழியர்கள் அராஜகம்

வெளிநாட்டுக்கு வேலைபெற்றுச் சென்ற தனது மகளின் நிலை குறித்து விசாரிக்கசென்றதாய்மீதுவெளிநாட்டு முகவர் நிலைய ஊழியர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

குருணாகல் பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டுமுகவர்நிலையமொன்றின் மூலம் குவைத் நாட்டுக்கு சென்ற மகளைப் பற்றி விசாரிக்கச் சென்ற தாயை அந்நிறுவன ஊழியர்கள் தாக்கியுள்ளனர் என குருணாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தாய் இது தொடர்பில் குருணாகல் பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து குருணாகல் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, சவூதி அரேபியாவில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்ட 40 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் குறித்த மரணத்தில் சந்தேகம் உள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தன் மக்களை அடக்கு முறைக்குள் வைத்துக்கொண்டு உலக நாடுகளில் மனித உரிமைகள் பேசுகிறார் ரணில்

## செல்வராஜா கஜேந்திரன் காட்டம்

மட்டக்களப்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் ஆகிய இருவரும் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.



சிறைக்கு சென்று பார்வையிட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் –

கடந்த நவம்பர் மாதம் இறந்தவர்களை நினைவேந்தல் செய்த காரணத்தால் மட்டும் இவர்கள் ஆறு பேரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலே தடுத்து வைத்திருப்பது என்பது மிகவும் கொடூரமான செயல் என்பதுடன் தடுத்து வைக்கப்பட்ட அறுவரில் ஒரு நபர் சுகவீனம் காரணமாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர்களுக்கு பிணை வழங்குமாறு குடும்பத்தால் கோரப்பட்டபோதும் இதுவரை பிணை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க சுவிட்ஸர்லாந்து சென்றிருக்கின்றார். தமிழ்த் மக்களுடைய ஜனநாயக உரிமைகளை மறுத்து, ஒரு கொரூரமான அடக்கு முறைக்குள் வைத்துக் கொண்டு உலக நாடுகளிலே ஜனநாயகம் பற்றியும் மனித உரிமை பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்.

காஸாவில் நடக்கும் தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது என்று முதலை கண்ணீர் வடிக்கின்றார். ஆனால், இங்கே மிக கொடூரமான ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார். இந்த நிலையில் சர்வதேசசமூகம் ரணில் விக்கிரமசிங்கமீது பாரிய அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

தற்போது அவர் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்று ஒன்றையும், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்று ஒன்றையும் கொண்டு வருவதற்கு உள்ளார். தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் எதிர்காலத்தில் தேர்தலில் தனது திருட்டுத்தனங்களையும் நேர்மையீனல்களையும் மக்கள் சமூகவலைத்தளங்களில் வெளியிடுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் மக்களைக் கைது செய்வதற்கும் இந்த நிகழ்நிலை காப்பு சட்டத்தை கொண்டு வரவுள்ளார்.

இந்த இரு சட்டங்களையும் நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். சர்வதேசசமூகம் இந்தசட்டங்களை வாபஸ் பெற வேண்டும் என்று அழுத்தங்களை கொடுக்க வேண்டும். – எனத் தெரிவித்தார். (05)

# யுக்திய நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா. மனிதவுரிமை ஆணையர் கவலை



இலங்கை எதிர்கொள்ளும் போதைப்பொருள் பிரச்சினைக்கு எதிராக அதிகாரிகள் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் போதைப்பொருள் பிரச்சினைக்கு சுகாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட நடவடிக்கைகளுக்கு பதில் கடுமையான பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பது குறித்து ஐ.நா. அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது.

டிசெம்பர் 17 ஆம் திகதிக்குப் பின்னர் 29000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சிலர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். மோசமாக நடத்தப்பட்டுள்ளனர் என குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன.

சோதனைகளை மேற்கொள்வதற்கான நீதிமன்ற அனுமதியில்லாமல் படையினர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். போதைப் பொருள் பாவனையாளர்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களைக் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்களை புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பியுள்ளனர் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது மக்கள் பல்வேறு மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அனுமதியற்ற தேடுதல்கள் கண்மூடித்தனமான கைதுகள், தடுத்துவைத்தல் மோசமாக நடத்துதல் சித்திரவதை பொதுஇடங்களில் ஆடைகளைக் களைந்து சோதனை போன்றன இடம்பெறுகின்றன எனத் தெரிவித்துள்ள ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் பாதிக்கப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் தாங்கள் பொலிஸாரிடமிருந்து அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் சமூகத்திற்கு பெரும்சவாலாக காணப்படுகின்ற போதிலும் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை உரிய அணுகுமுறையில்லை போதைப்பொருள் துஸ்பிரயோகம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் முதன்மையாக சமூக மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடையவை போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவற்றை பயன்படுத்துபவர்களை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும். உரிய முறைகளை பயன்படுத்தவேண்டும் வெளிப்படையான நீதிமன்ற நடவடிக்கைகள் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் தனது யுக்திய நடவடிக்கையை மறுஆய்விற்கு உட்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கெர் டேர்க் மனித உரிமையை அடிப்படையாக கொண்ட அணுகுமுறையைப் பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# அல் ஷபாப் பயங்கரவாத அமைப்பால் இலங்கையர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்படவில்லை

## பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

சோமாலியாவில் உலங்குவானூர்தி விபத்துக்குள்ளானதையடுத்து, அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பால் இலங்கையர்கள் குழுவொன்று பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் பொய்யான வதந்திகளை பாதுகாப்பு அமைச்சு கடுமையாக மறுத்துள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் நடவடிக்கையின் போது சரக்கு விமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த விமானப்படையின் எம்.ஐ. 17 உலங்கு வானூர்தி சாம் – ஒன்ஜாவில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானது. எவ்வாறிருப்பினும் அதிலிருந்த பணியாளர்களின் பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை விமானப்படை விரைவுபடுத்தியுள்ளது. எனவே இது குறித்து தவறான தகவல்களை நம்பி ஏமாற வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு மக்களைக் கேட்டுக் கொள்கிறது. மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வழி பிறக்கட்டும்

இன்று தமிழர் திருநாளாம் தைத் திருநாள். தை ஆண்டின் முதல் நாளா இல்லையா என்கிற சர்ச்சைகள் ஒருபுறம் இருக்கின்றன. சித்திரையில் தமிழர்களின் வருடம் பிறக்கின்றதா தையில் பிறக்கின்றதா என்பதே சர்ச்சை. சித்திரையை தமிழர்களின் வருடப் பிறப்பு என்று கூறமுடியாத அளவிற்கு அது சைவ மக்களினால் மட்டுமே கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாக அது வளர்ந்து நிற்கின்றது. மதப் பிரிவுகள் இன்றி தமிழர்களின் தேசியத் திருநாளாகத் இந்தத் தைத் திருநாள் பொங்கல் விழா வளர்த்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே அது தமிழர்களின் திருநாளாகக் கொண்டாடப்படுவதில் தவறில்லை. தமிழர்களின் ஒரே தேசியத் திருநாளாகவும் அதுவே அமையும் பொதுப் பண்பையும் கொண்டுள்ளது.


தத்திருநாளை உழவர் திருநாள் என்றும் சொல்கின்றோம். உழவுத் தொழிலுக்கு முழு முக்கிய காரணமாக விளங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நாள் அது. உலகம் முழுவதும் பல்வேறு இனக்குழுமங்களும் இந்த நன்றியறிதழ் விழாக்களை ஒவ்வொரு பெயர்களில் கொண்டாடி வருகின்றன; மகிழ்கின்றன. அந்த வகையிலும் உலகப் பொதுமையைக் கொண்டிருக்கும் தைத் திருநாள் தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படுவது சாலப் பொ–ருத்தமே.

தைத் திருநாள் வெறும் நன்றியறிதல் பெருநாள் மட்டுமல்ல நம்பிக்கையை விதைக்கும் திருநாளும்கூட. அறுவடையின் பின்னர் மகிழ்ச்சியையும் எதிர்பார்ப்பையும் கூடவே அழைத்து வரும் தை மகளைப் பார்த்து தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த நம்பிக்கைதான் ஒவ்வொரு தமிழர்களின் வாழ்க்கையையும் உந்தித் தள்ளும் சாதக எண்ணத்தை உருவாக்குகின்றது, எத்தகைய நெருக்கடிச் சூழலிலும்.

அரசியலைப் பொறுத்த வரையிலும் ஒவ்வொரு தைத் திருநாளிலும் மக்கள் ஆர்வத்தோடு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டிவிடும் என்றே நம்பிக்கை கொள்கின்றனர். இலங்கையில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர்கள் இந்த நம்பிக்கையோடுதான் தை மாதங்களை எதிர்கொள்கின்றனர். தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றனர். அரசியல் தீர்வு இன்றி வளர்ச்சியும் அமைதியும் சாத்தியமில்லை என்பதால் இந்த எதிர்பார்ப்பு ஒவ்வொரு ஆண்டும் தொடர்கின்றது.

இருந்தாலும் அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் அரசியல் சூழல் இன்னும் ஏற்படவில்லை. அரசியல்வாதிகள் அதற்கான சூழலைப் பின்தள்ளிக்கொண்டே செல்கின்றனர். அரசியல் தீர்வு நாட்டின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை உணர்ந்துகொண்ட, கூறிக்கொள்கின்ற தலைவர்கள்கூட, அதனைக் கொண்டு வருவதில் அக்கறையற்றவர்களாக இருப்பது துரதிர்ஸ்டமே. இந்தத் தைத் திருநாளாவது அவர்களின் கண்களைத் திறந்து புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சவேண்டும். பிறக்கும் தை வழியையும் திறக்கவேண்டும் என்கிற நம்பிக்கையோடு அனைவருக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள்.






# இயற்கை மீது அக்கறை கொண்ட பேராசிரியர்

**ராமச்சந்திர குஹா**

இயற்கையை மனிதர்கள் கொடூரப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள பருவகால மாறுதல்கள் என்ற நெருக்கடி நம்முடைய கவனத்தை வலுக்கட்டாயமாக ஈர்த்திருக்கிறது. ஆனால், எம்மைப் பீடித்துள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகள் புவி வெப்பமடைவதால் மட்டும் உண்டானவை அல்ல.

மூச்சுத் திணறவைக்கும் அளவுக்கு வட இந்திய நகரங்களில் காற்று மாசுபடுவதும், சாலைகள், அணைகள் கட்டுவதற்காக அக்கறை சிறிதும் இல்லாமல் இமயமலைப் பிராந்தியத்தின் இயற்கை வளங்களைச் சூறையாடுவதும், நிலத்தடி நீர் சேமிப்பை வரம்பில்லாத ஆழ்துளைக் கிணறுகள் மூலம் வற்றச் செய்வதும், 'தொழிலுற்பத்திக்காக' என்ற பெயரில் மண்ணில் ரசாயனங்களை அளவின்றிக் கலக்கவிடுவதும், வனங்களிலும் மலைகளிலும் வாழ்ந்த பல்லுயிர்களைத் தொடர்ந்து இழப்பதும் - பருவநிலை மாறுதலுக்குத் தொடர்பில்லாத நாசகரமான செயல்களாகும்.

சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுவரும் கேடுகளைத் தடுப்பது எப்படி என்று இப்போது ஏராளமான கட்டுரைகளும் புத்தகங்களும் பதிப்பிக்கப்படுகின்றன. ஆனால், இந்தக் கட்டுரை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட ஒரு புத்தகம் குறித்து கவனம் செலுத்த விரும்புகிறது.

### அது என்ன புத்தகம்?

'மனிதனும் இயற்கையும்: நவீன மனிதனின் ஆன்மிக நெருக்கடி' (Man and Nature: The Spiritual Crisis of Modern Man) என்பது புத்தகத்தின் தலைப்பு. அதை எழுதியவர் தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறைப் பேராசிரியர் செய்யது ஹூசைன் நாசிர்.

இப்போது நாசிர் 90 வயதை எட்டிய பிறகும் பயனுள்ள வகையிலும் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதத்திலும் வாழ்ந்துவருகிறார். அறிஞர்களும் எழுத்தாளர்களும் கொண்ட குடும்பத்தில் ஈரானில் பிறந்தார். மசாசுசெட்ஸ் தொழில்நுட்பக் கல்விக் கழகத்திலும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலும் படித்த அவர் 1958இல் தாய்நாடு திரும்பினார்.

மேற்கத்திய நாடுகளில் அதிக ஊதியத்துடன் கிடைத்த வேலைகளையும் பெருமைப்படத்தக்க கல்விநிறுவனங்களின் அழைப்புகளையும் நிராகரித்த அவர், தெஹ்ரானில் அலையலையாக நிறைய மாணவர்களுக்கு கற்பித்து நல்ல வழிகாட்டியாகத் திகழ்ந்ததுடன் பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புத்தகங்களையும் எழுதினார்.

### செய்யது ஹூசைன் நாசிர்

எப்போதாவது பிரெஞ்சு, அரபி மொழிகளிலும்கூட நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஈரானில் 1979இல் ஏற்பட்ட புரட்சி காரணமாக தாய்நாட்டை விட்டே அவர் வெளியேற நேர்ந்தது. காரணம், அயதுல்லாக்கள் சுதந்திர சிந்தனைகளை அனுமதிக்கும் நிலையில் இல்லை. அது முதல் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய நாசிர் நிறைய நூல்களை எழுதினார் — குறிப்பாக மதங்களை ஒப்பிட்டு அறிவார்ந்த நூல்களைப் பதிப்பித்தார்.

''மேற்கத்திய நாடுகளில் சுற்றுச்சூழல் நாசப்படுத்தப்படுகிறது என்ற விழிப்புணர்வு இருக்கிறது; இந்தப் பிரச்சினைகளைப் பேசுகிறவர்களே பொருளாதார வளர்ச்சியும் அவசியம் என்கின்றனர்; மனிதர்களுடைய வறுமைக்கு எதிரான போரில் வளர்ச்சியை அடைய, புவியையே நாசப்படுத்தும் திட்டங்களுக்கு ஆதரவு தருகின்றனர். வேறு வகையில் சொல்வதென்றால், இயற்கைக்கும் மனிதகுலத்துக்குமான சமநிலை அழிந்ததால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, இயற்கையை மேலும் மேலும் மேலாதிக்கம் செய்யும் திட்டங்களையே தீட்டுகின்றனர்.... மிகச் சிலர்தான் உண்மையை உணர்ந்துள்ளனர், இயற்கைக்கு எதிரான அணுகுமுறையை மனிதர்கள் கைவிட்டால்தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர்'' என்று தன்னுடைய 'மனிதனும் இயற்கையும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் நாசிர்.

### இந்தப் பிரச்சினைகளின் ஆணி வேர் எது?

இந்தப் புத்தகம் 1966இல் சிகாகோ பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய உரைகளின் அடிப்படையில் தொகுத்து எழுதப்பட்டது. இது மேற்கத்திய நாடுகளை " குறிப்பாக அமெரிக்காவை இலக்காகக் கொண்டு எழுதப்பட்டது என்றாலும், அவர் விடுத்த எச்சரிக்கை நமக்கும் பொருந்தும். காரணம் இன்றைய ஆசிய நாடுகளின் ஆட்சியாளர்கள் மேற்கத்திய பொருளாதார வளர்ச்சி மாதிரிகளை மிகுந்த ஆர்வத்துடன் பின்பற்றுகின்றனர்.

"உலகு இப்போது சந்திக்கும் சூழல் பிரச்சினைகளின் ஆணி வேரே, வளர்ச்சித் திட்ட சிந்தனைகளில்தான் இருக்கிறது " என்கிறார் நாசிர்.

### நாசிரின் வாதங்கள்

பொருளியல் என்பது தனிப் பாடமாக பிரிக்கப்பட்டதன் விளைவாகத்தான், 'மனிதனுடைய ஆற்றலுக்கு வரம்பே இல்லை, அவனால் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் போய் சுகங்களை அனுபவிப்பதற்கான நுகர்வுச் சாதனங்களைப் படைக்க முடியும்' என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது என்று வாதிடுகிறார். உலகியல் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள மட்டுமே படைக்கப்பட்டவன் மனிதன் என்ற கருத்து வலுத்துவருகிறது என்று சுட்டிக்காட்டுகிறார்.

"நவீன அறிவியலும் நவீனப் பொருளியலும் மனிதனை - அவன் கடைப்பிடிக்க வேண்டிய தார்மிக, ஆன்மிக சுயக் கட்டுப்பாடுகளிலிருந்து பிரித்துவிடுகின்றன. இயற்கை வளங்களை முடிந்தவரை உச்சபட்சம் நம்முடைய தேவைகளுக்குப் பயன்படுத்தி அனுபவிக்க வேண்டும் என்ற வெறியை ஊட்டுகின்றன. அப்படிப் பயன்படும் இயற்கையைக் காக்க வேண்டிய கடமையோ, பொறுப்போ நமக்குக் கிடையவே கிடையாது என்ற எண்ணத்தையும் விதைத்துவிடுகின்றன ' என்று விவரிக்கிறார் நாசிர்.

இப்போது மனித குலம் அழிவிலிருந்து தப்பிப்பதற்காகவாவது இயற்கையை மேற்கொண்டு சிதைக்காமல் அதனுடன் வாழவும் அதன் புனிதத்தை மீண்டும் நிலைநாட்டவும் செயல்பட்டாக வேண்டும். அதற்காக நவீனம் என்று கருதப்படாத அன்றைய

தொடர்ச்சி 5 ம் பக்கம்.....

# இயற்கை மீது அக்கறை கொண்ட பேராசிரியர்

4 ம் பக்க தொடர்ச்சி.....

நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் மீண்டும் கடைப்பிடித்தாக வேண்டும்.

நாசிரின் 'மனிதனும் இயற்கையும்' என்ற புத்தகம் 1968இல் முதலில் பதிப்பிக்கப்பட்டது. அப்போது அவர் தெஹ்ரானில்தான் வாழ்ந்துவந்தார். பத்தாண்டுகளுக்குப் பிறகு ஈரானை விட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தம் மதப் பழமைவாதிகளால் அவருக்கு ஏற்பட்டது. அமெரிக்காவில் அவர் தன்னுடைய வாழ்க்கையைப் புதிய வகைக்கு மாற்றிக்கொண்டார். வேறு கருப்பொருள்களை மையமாகக் கொண்டு புத்தகங்கள் எழுதினார்.

இறுதியாக மீண்டும் மனிதனும் இயற்கையும் பாணி புத்தகங்களுக்குத் திரும்பினார். 1996இல் 'மதமும்-இயற்கையின் ஒழுங்குமுறையும்' என்ற புத்தகத்தை எழுதினார். - மதச்சார்பற்ற மனிதன் என்ற கருத்தாக்கமும், புவியுலகமனிதன்தனித்துவம் மிக்கவன் என்ற முழுமைக் கொள்கையும் வளர்வது மனித குலத்துக்கும் இயற்கை வரலாற்றுக்கும் அளவிட முடியாத பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். இயற்கை என்பது புனிதமானது என்ற கருத்திலிருந்து மனித குலம் வெகுதொலைவு விலகிவிட்டது. இயற்கை என்பது உயிர்களின் தாய் என்பது மறக்கப்பட்டு, இயற்கை என்பதே உயிரில்லாத ஜடம், அதன் மீது ஆதிக்கம் செலுத்தலாம், நம்முடைய தேவைக்கேற்ப அதைச் சுரண்டலாம் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் வலுத்துவிட்டது- என்கிறார்.

### தவறான உலகியல் சிந்தனைகள்

புவிசார்ந்த சூழல் பிரச்சினைகளுக்கு வெவ்வேறு மதங்களின் பண்பாட்டு அடிப்படையில் தீர்வு கண்டு நெருக்கடிகளை எப்படிக் களையலாம் என்று 'மதம், இயற்கையின் ஒழுங்குமுறை' என்ற தன்னுடைய நூலில் விளக்கியுள்ளார். இயற்கையின் புனிதத்தன்மையை உணர்ந்துள்ள வெவ்வேறு மதங்கள் தங்களுடைய சிந்தனைகளைப் பரஸ்பரம் பகிர்ந்துகொண்டு, இயற்கைக்கு ஏற்படுத்திய காயங்களை ஆற்ற முடியும் என்கிறார்.

அவருடைய இந்த அணுகுமுறை இன்றைய தொழில்நுட்ப நிபுணர்களுடைய சிந்தனைக்கு எதிராக இருக்கிறது. சூரிய ஒளி, காற்று, ஹைட்ரஜன் போன்ற புதிய ஆற்றல் வளங்களைக் கொண்டு இப்போது நிலவும் சூழல் சீர்கேட்டை சரிசெய்துவிடலாம் என்று அவர்கள் கருதுகின்றனர். பெட்ரோலில் ஓடும் கார்களுக்குப் பதிலாக மின்சார பற்றரிகளைப் பயன்படுத்தினால் கரிப்புகை மாசு நீங்கிவிடும் என்று நினைக்கிறார்கள், புவிசார் பொறியியல் நுட்பங்கள் மூலம் அழிவிலிருந்து தப்பிக்கலாம் என்று கருதுகின்றனர்.

நாசிரின் 'பருவநிலை முதலாளித்துவம்' என்ற சமீபத்திய புத்தகத்துக்கு உலகின் முன்னணி கோடீஸ்வர தொழில்நுட்ப வல்லுநர்கள் அங்கீகாரம் அளித்துள்ளனர்; புதிய அறிவியல்- தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மூலம் வளர்ச்சி சக்கரத்தை இடைவிடாமல் சுழல வைக்க முடியும், பருவநிலை மாறுதல்களால் ஏற்படும் கெடு பலன்களையும் எதிர்கொள்ள முடியும் என்கிறது அந்தப் புத்தகம்.

''சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு தவறான தொழில்நுட்பம் அல்லது தவறாகப் பயன்படுத்தபடும் தொழில்நுட்பங்கள் காரணம் அல்ல, தவறான உலகியல் சிந்தனைகள்தான் அடிப்படைக் காரணம்'' என்கிறார் பேராசிரியர் நாசிர். ''தவறான பொறியியல் நுட்பங்கள் காரணமாக சூழல் சீர்கேடுகள் நடைபெறவில்லை, இயற்கை பற்றி தனக்கிருந்த இயல்பான அறிவை மனித குலம் இழந்ததும், அகத்தில் இருந்த ஆன்மிக உணர்வு மங்கியதும்தான் சூழல் நெருக்கடிக்குக் காரணம்- என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

### மாற்றங்கள் அவசியம்

நாசிரின் அணுகுமுறைக்கும், நவீன முதலாளித்துவ சிந்தனையாளர்களின் அணுகுமுறைக்கும் நான் ஆதரவாளன், அதேசமயம் இரண்டுமே முழுமையானவை அல்ல, பகுதியானவை என்றே கருதுகிறேன். புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் தொடர்பான கண்டுபிடிப்புகள் வரவேற்கப்படவேண்டும், அதேசமயம் இயற்கை தொடர்பாக மேலதிக கவனத்துடன் கூடிய பாதுகாப்பு அணுகுமுறை OOயும் வேண்டும். வாழ்க்கைமுறைகளுக்கும் இவற்றில் முக்கியப் பங்கு உண்டு.

உலக கோடீஸ்வரர்கள் தங்களுடைய தனி விமானங்கள், சொகுசு பங்களாக்கள், சகல வசதிகளும் நிரம்பிய கப்பல் போன்ற சொந்தப் படகுகள் போன்ற சுகபோகங்களை எதற்காகவும் விட்டுத்தராமல் பருவநிலை மாறுதல்களைஎப்படியாவதுதடுத்துநிறுத்தியாக வேண்டும்என்றுவிரும்புகிறார்கள். இன்றைய உலகில் மதம் என்பது மக்களிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, வெறுப்பையும் விரோதத்தையும் வளர்ப்பவையாகவே மாறிவருகின்றன.

மதத்தைப் பின்பற்றும் தனிமனிதர்கள் வெகு கவனத்துடன் செயல்பட்டாலும், மற்றவர்கள்தங்களுடையமதமேஉயர்வானது என்பதால் மத எதிரிகளை அழிக்க போர் நடத்தப்போவதாகஅறிவித்துவன்செயல்களைத் தூண்டுகின்றனர்.

புத்தர், காந்தி, அசிசி போன்ற மிகச் சில மத நம்பிக்கையாளர்கள் தங்களுடைய மத நம்பிக்கையை வெற்றிகரமாக எடுத்துரைத்ததுடன்பிறசமூகங்களுடனும்பிற மதத்தாருடனும் சுமுகமாக வாழ தாங்களே முன்னின்று செயல்பட்டனர்.

தொழில்நுட்ப வளர்ச்சியால் இப்போது இருப்பதைவிட சுகமான வாழ்க்கைக்கு நாம் சென்றுவிட முடியும் என்ற தவறான நம்பிக்கையை உடைக்கிறார் பேராசிரியர் நாசிர். போகங்களை அனுபவிக்கத்தான் பிறந்தோம் என்ற எண்ணங்களிலிருந்து விடுபட்டு உள்ளிருக்கும் ஆன்ம சக்தி மீது அக்கறைசெலுத்துமாறு அழைப்பு விடுக்கிறார். இயற்கைக்கு மரியாதை செலுத்துங்கள், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதில் சுய கட்டுப்பாட்டைக் கடைப்பிடியுங்கள், இதற்காக தீவிர மதப்பற்றாளனாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்கிறார்.

சுற்றுச்சூழல் நெருக்கடியைத் தீர்க்க நிறுவனங்கள் மூலமான மாற்றங்களும் அவசியம். அதிகாரம் அனைத்தும் மையத்தில் குவிக்கப்படாமல் பரவலாக்கப்பட வேண்டும், வெளிப்படையான செயல்பாட்டைக் கைக்கொள்ள வேண்டும், அரசு நிர்வாகத்தில் ஜனநாயக ரீதியிலான பிரதிநிதித்துவம் அடி முதல் நுனி வரையில் இருக்க வேண்டும்.

நிலக்கரிச் சுரங்க அதிபர்களும் பெட்ரோலிய எண்ணெய் நிறுவனங்களின் உரிமையாளர்களும் - தேர்தலுக்கு எப்படி நன்கொடை தர வேண்டும், தேர்தலில் எதைப் பேச வேண்டும், எந்த அடிப்படையில் அரசு செயல்பட வேண்டும், சட்டங்கள் எப்படித் திருத்தப்படவேண்டும், செய்தி ஊடகங்கள் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்பதையெல்லாம் தீர்மானிக்கும் இடத்தில் இருப்பது சூழல் காக்கப்பட வேண்டிய பொறுப்புக்கு நேர் விரோதமான சூழலாகும்.



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் அவர்கள் குருதியால் எழுதப்பட்டுள்ளது

## அருட்தந்தை மா.சத்திவேல் இடித்துரைப்பு



ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்கான போராட்ட வரலாறு என்பது அவர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு -

ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக் கான போராட்டவரலாறுஎன்பதுஅப்போராட்டத்திற்கு உந்து சக்தியாக இருந்த போராளிகளின் அரசியல் சிந்தனை. அதற்கான அவர்களின் உழைப்பு உயிர் தியாகம் என்பவற்றோடு அவர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

அந்தவரலாறுஆவணப்படுத்தப்படுவதோடு அடுத்த சந்ததிகளுக்கு உரிய வகையில் கடத்தப்படவும் வேண்டும். அதுவே சமூக விழிப்பிற்கும்,வாழ்வுரிமைப்போராட்டத்திற்கும் சக்தியாவதோடு அதனை மையமாக வைத்து மக்கள் திரள்வதற்கும் வழிவகுக்கும்.

அந்த வகையில் மலையகத் தொழிலாளர் வரலாற்றில் 200 வருட வாழ்வுமே போராட்ட வரலாறு தான். இவ் வரலாற்றுக்கு உரியவர்களை நினைவேந்தல் செய்வது காலத்தின் கட்டாயமாகும்.

மலையக தியாகிகள் நினைவு கூறப்படல் வேண்டும் எனும் பேரார்வம் எழுச்சி கொண்டுள்ள சூழ்நிலையில் தியாகிகளின் வாழ்க்கை வரலாறு, அரசியல் சிந்தனை, அது தொடர்பான அவர்களின் ஈடுபாடு, விடுதலை வேட்கை, காலச் சூழ்நிலை என்பன மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு தியாகிகள் தினம் அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

இன்றைய மலையக தமிழர்களின் முன்னோர் உழைப்பிற்காக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட போது கடல் பிரயாணத்தில், காடுகள் நிறைந்த பாதையில் நடந்து வருகையில் காட்டு மிருகங்களின் தாக்கத்திற்கும், அரவங்களின் தீண்டுதலுக்கும் உட்பட்டு ஆயிரக்கணக்கானோர் பலியாகி உள்ளனர். அதேபோன்று நோய் மற்றும் பட்டினி காரணமாக மரிக்கும் தருவாயில் இருந்தோர் வரும் பாதையிலேயே கைவிடப்பட்டு அனாதரவாக மரித்துள்ளனர்.

மலைப்பாங்கான குளிர் பிரதேசத்தில் காலநிலை தாக்கம் காரணமாகவும் நோயற்ற காலத்தில் முறையான வைத்திய வசதிகள் இன்றியும் ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். இவையெல்லாம் இயற்கையான மரணம் அல்ல. அன்றைய பிரித்தானிய முதலாளித்துவ ஏற்றுமதி பொருளாதாரம் இவர்களை கொலை செய்தது என்றே கூறல் வேண்டும்.

அத்தோடு பெரும் தோட்டங்களை உருவாக்க காடுகளை அழித்த போது இயற்கையின்சீற்றத்திற்கும்வனவிலங்குகளின் தாக்கத்திற்கும் உள்ளாகி மரணத்தைதழுவிய நூற்றுக்கணக்கானோர் கௌரவமான முறையில் அடக்கம் செய்யப்படாது பள்ளங்களில்தள்ளப்பட்டதாகவும், மலைகளில் ஆங்காங்கே புதைக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றது.

இவர்களும்கொல்லப்பட்டவளாககருதுதல் வேண்டும். மலையகத்தின்ஒவ்வொருஅங்குல நிலத்திலும் தொழிலாளர் வர்க்கத்தின் இரத்தம் தோய்ந்துள்ளதோடு மலையகம் எங்கும் அவர்களின் புதைக்கப்பட்ட உடல்களின் எச்சங்களும் இருக்கின்றன.

தொடர்ந்து நாட்டின் இனவாத அரக்கனும் பல்வேறுகாலகட்டங்களில்மலையகமக்களை கொலை செய்திருக்கின்றான். வாழ்வு தேடி வன்னி சென்றோரையும் இனவாதம் விட்டு வைக்கவில்லை. இதனை விட மலையகத்தவர்கள் விடுதலை இயக்கங்களில் போராளிகளாகவும் உயிர் தியாகமாகி உள்ளனர். ஏதோ ஒரு வகையில் இவர்களும் நினைவு கூறப்பட வேண்டியவர்களே.

இந்த வரிசையில் தொழிலாளர்களின் உரிமை, தொழிற்சங்க உரிமை, மொழி உரிமை, நில உரிமை போன்றனவற்றிற்காக நடந்த போராட்டங்களின் போது பொலிஸாரின் துப்பாக்கிபிரயோகத்தில்உயிர்துறந்தவர்களும் உள்ளனர். அத்தோடு தொழிற்சங்க பகை காரணமாகவும் சகோதர கொலைக்கு உட்பட்டவர்களும் உள்ளனர்.

மலையகதியாகிகளின்வரலாற்றில்தூக்குத் தண்டனைக்கு உட்பட்டு தூக்கு கயிற்றினை மாலையாக ஏற்று தொழிலாளர்களுக்கு ஒளியாகி, வெள்ளைக்கார துரைமாரை உயிர் அச்சம் கொள்ளவும், அன்றைய காலனித்துவ ஆட்சியாளர்களை அச்சத்துக்கு உட்படுத்தவும் வித்திட்ட வேலாயுதம் வீராசாமி இவரின் தியாக வரலாறு விசேட அடையாளத்தை தமதாக்கிக் கொண்டுள்ளது.

முல்லோய தோட்ட சம்பவத்தை(1940) தொடர்ந்து அனைத்து தோட்ட துறைமார்களும் தொழிற்சங்கங்களின் உருவாக்கத்தை முளையிலேயே அகழ்ந்து அகற்றுவதற்கும், தொழிலாளர் ஒன்று திரண்ட சக்தியாக எழுவதைத் தடுப்பதற்கும் பல்வேறு ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டப் போது முல்லோயா தோட்டத்திற்கு அண்மையில் ஸ்டெலன் பேர்க் (கந்தலா) தோட்டத் தொழிலாளர் இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தில் சக்தி பெறத் தொடங்கினர்.

இதனை அறிந்த அத்தோட்ட அதிகாரியான சி.ஏ.ஜி போப் துறை தொழிலாளரை அடக்குவதில் தீவிரம் காட்டியதோடு தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுக்க அடக்கு முறைகளைக் கையாண்டார். அதற்கு எதிராகக் கிளர்ந்த தொழிலாளர்களில் தீவிர சிந்தனை கொண்ட சிலர் மறைமுகத் திட்டம் தீட்டி, துறையின் பிரயாணங்கள் என்பவற்றை உன்னிப்பாக அவதானித்து ஒரு நாள் அவர் அடுத்த தோட்டத்திற்கு இரவு வேளையில் உணவு விருந்துக்கு சென்று திரும்பும் போது வழிமறித்தோரால் அடித்து கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பத்தோடு தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட வீராசாமி, வேலாயுதம் எனும் இருவர் 1942 பெப்ரவரி மாதம் முறையே 27 ஆம், 28 ஆம் திகதிகளில் தூக்கில் இடப்பட்டனர். இவர்கள் இறுதியாக எழுதிய கடிதத்தில் 'உலக தொழிலாளர் வர்க்கம் நீடூழி வாழ வேண்டும்'என நமது வேட்கையை வெளிப்படுத்தி உள்ளனர்.

மலையக மக்களின் வரலாறு முழுவதும் தியாகமே அடங்கியுள்ளது. அந்த வகையில் மலையக தியாகிகள் என அடையாளப்படுத்தப்படுபவருடையவாழ்க்கை வரலாறு, அவர்களின் போராட்டம், அரசியல் நோக்கம்என்பனமக்களைசென்றடைவதற்கு முறையான வேலை திட்டம் அவசியம். அதுமட்டுமல்ல அவர்கள் தொடர்பான மீள் வாசிப்பும்எழுத்துருபெற்றுமக்கள்மத்தியிலே கொண்டு செல்லப்படலும் வேண்டும்.

அதுவே மலையக சமூக விழிப்பிற்கு வழிவகுக்கும். மலையகத் தமிழர்கள் இனமாகவும் தொழிலாளர் வர்க்கமாகவும் ஒடுக்கு முறைக்கும் இன அழிப்பிற்கும் உள்ளாகி வரும் சூழ்நிலையில் மலையக மக்களை அரசியல் மையப்படுத்தி அடுத்த நூற்றாண்டு நோக்கி நகர்வதற்கு சரியான உகந்த நினைவு நாளை தெரிவு செய்து நடத்தப்படுதல் சாலச் சிறந்ததாகும். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக செயற்படும் குழுவினர் தற்போதுள்ளனர். இவர்கள் நாட்டுக்குள் இருந்துகொண்டே எதிர்ப்புக்களை வெளிப்படுத்தும் குழுவினராக உள்ளனர்.

இதனைவிடவும், சட்டத்தரணியில் ஒரு குழுவினர் உள்ளனர் இவர்கள் தொண்டுநிறுவனங்களில் பணம்பெறும்நபர்களாகஉள்ளனர். அவர்கள் பணம் கிடைத்தவுடன் எமது நடவடிக்கைகளுக்கு எதிராக அறிக்கை வெளிடுகின்றனர்.

எமது யுக்திய நடவடிக்கைளை முன்னெடுக்கும் பதில் பொலிஸ் மா அதிபருக்குஎதிராகநான்குவழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எதற்காக அந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை.

எமது நடவடிக்கையை கட்டுப்படுத்துவதற்காகவா அவ்வாறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி காணப்படுகின்றது. அந்தக் கேள்விக்கு விடை தேடுவதாக இருந்தால்,இந்தச்செயற்றிட்டத்தினை யாருக்குநிறுத்தவேண்டியதேவை உள்ளது என்பதைப் பார்க்க வேண்டும்.

போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கே இச்செயற்றிட்டத்தினை நிறுத்த வேண்டிய தேவையுள்ளது. அவர்களுக்கான செயற்படும் ஒருசில சட்டத்தரணிகள் உள்ளனர். அவர்கள் போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆஜராகின்றனர். அவர்களிடமிருந்து மில்லியன் கணக்கான பணத்தைப் பெற்று போதைப்பொருள்விற்பனையாளர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர்.

ஆவ்விதமானசெயற்பாடுகளை நிறுத்தாதுவிட்டால்போதைப்பொருள் விற்பனையாளர்களுக்குஆதரவாக யார் செயற்படுகின்றார்கள் என்ற பெயர் விபரங்கள் முகவரிகளுடன் வெளிப்படுத்தத் தயங்கப் போவதில்லை.

நாமும்அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே இந்தச் செயற்றிட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்றோம். என்னைக் கொலை செய்யப்போவதாகஅச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. அண்மையில் கூட மரணிப்பதற்கு தயாராகுமாறு கடிதம்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அவ்விதமானஅச்சுறுத்தல்களை கடந்து நாம் செயற்படுகின்றபோது, உங்களுக்கும், உங்களது பிள்ளைகளின்எதிர்காலத்துக்குமாக இச்செயற்பாட்டை வெற்றிபெற வைப்பதற்காக ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றார்.

## மாற்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான நிலையில் எமக்குள் எதற்காக மத பேதம், எதற்காக சாதிய பேதம், எதற்காக இன,மொழி பேதங்கள். நாம் தேசிய மாற்றமொன்றைச் செய்ய வேண்டியுள்ளது. அந்த தேசிய மாற்றமானது முழு நாட்டுக்கும் அவசியமானது, முழு நாட்டு மக்களுக்கும் அவசியமானது.

அந்த தேசிய மாற்றத்தில் அனைத்து சகோதரர்களும் இன, மத, மொழி, சாதிய பேதமின்றி கைகோர்க்கவேண்டும். அந்ததேசிய மாற்றத்துக்கான தலைமையை தேசிய மக்கள் சக்தி வழங்கத் தயாராகிவிட்டது என்றார்.

## அடுத்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடவியலாளர் சந்திப்பின்போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை. ஏனென்றால்அவர்அடுத்தஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அதனை அவரது சகாக்கள் உறுதி செய்துள்ளனர்.

இவ்வளவு காலமும் அவர்கள் அரசியல் கணக்கொன்றைச் செய்தார்கள். அதாவது, ஐக்கியமக்கள் சக்தியில் இருந்து ஒருகுழுவினர் அவர்களுடன் இணைவார்கள். ஆதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி பலம் இழக்கும். அதனால் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி பலம்பெறும். அந்த வாக்குகளின் அடிப்படையில் ஜனாதிபதியாக இலகுவாக வெற்றி பெற முடியும் என்பதே அந்தக் கணக்காகும்.

ஆனால்தற்போதுநிலைமைகள் மாற்றமடைந்துள்ள. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து எந்தவொரு உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்லப்போவதில்லை. யாரும்மூழ்கும்கப்பலில்ஏறுவதற்கு விரும்பவில்லை என்பதே உண்மையாகும் என்றார்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை மற்றும் மரியாதைக்காக நடத்தப்படும் ஒரு சிறப்பு விழாவாக இந்த தைப்பொங்கள் திருவிழாவை சுட்டிக்காட்டலாம்.

தைப்பொங்கல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலானபரஸ்பரபிணைப்புக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும், மேலும் இந்து மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு நல்ல எண்ணங்களைச் சேர்க்கும் பண்டிகை என்றும் அழைக்கலாம்.

புதிய அறுவடையை சூரிய பகவானுக்குபடைத்துஅடுத்துவரும் ஆண்டில் நல்ல அதிர்ஷ்டத்தை கொண்டுவர வேண்டப்படுகின்றது. நம் நாட்டில் உருவாக்கப்பட்ட வங்குரோத்து நிலையால் ஏற்பட்ட சவால்மிக்க ஆண்டின் முடிவில் இன்னும் பல சவால்களுடன் இன்னுமொரு ஆண்டிற்குள் நுழைந்துள்ளோம்.

இனம், மதம், ஜாதி, குலம் என்ற வேறுபாடின்றி இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான இயற்கையின் ஆசீர்வாதங்களை இந்தத் தைப்பொங்கள் தினத்தில் பெற்று உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதிய பயணத்திலும் புதிய மாற்றத்திலும் இணைந்து கொள்ளுமாறுஉலகெங்கிலும்உள்ள இலங்கையர்களை இத்தருணத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பில் பெண் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்த நபரைக் கண்டுபிடிக்க உதவி கோரும் பொலிஸார்



கொழும்பு ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 10 ஆம் திகதி பெண் ஒருவரை பெற்றோல் ஊற்றி தீ வைத்து கொலைசெய்ய முயற்சித்த சந்தேக நபரை அடையாளம் காண்பதற்கு ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு, இலக்கம் 93ஃ13 இல் வசிக்கும் மொஹமட் நிஜாம் மொஹமட் சப்னிஸ் ஆவார்.

சந்தேகநபர்பற்றிஏதேனும்தகவல் தெரிந்தால், பின்வரும் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். 0717 478 912 0718 594 423 0112 323 356. (05)

# மாட்டுத் தலையுடன் இளைஞன் கைது

## யாழ்.கீரிமலையில் சம்பவம்

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் மாட்டின் தலையுடன் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கீரிமலை பகுதியில் மாடொன்றை சட்டவிரோதமான முறையில் இறைச்சியாக்குவதாக காங்கேசன்துறை பொலிஸாருக்குத்தகவல் கிடைக்கப்பெற்றது.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்த போது, சம்பவஇடத்தில்மாட்டின் தலையுடன் நின்ற இளைஞனைக் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து, வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் மாட்டிறைச்சியுடன் தப்பிச்சென்ற ஏனைய நபர்களைக் கைது செய்வதற்குநடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழ் அரசுக் கட்சி தலைமை வேட்பாளர்கள் ஏட்டிக்குப் போட்டியாக தீவிர பிரசாரங்களில்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைமைக்கான வேட்பாளர்களில் சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் ஏட்டிக்குப் போட்டியான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சோ.சேனாதிராசாவின் கோரிக்கைக்கு அமைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி திருகோணமலையில் மத்திய குழு கூட்டத்தைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைமைக்கான தெரிவு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சுமந்திரன், சிறீதரன், யோகேஸ்வரன் ஆகியோர் இடையே மும்முனைப் போட்டி நிலவுவதால் பொதுச்சபை உறுப்பினர்களின் மூலம் இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக தலைமைத் தெரிவு நடைபெறவுள்ளது.

தற்போது வாக்களிப்பதற்கான அட்டைகள் அச்சிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, வாக்கெடுப்புக்கானஏற்பாடுகளும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், தலைமைக்கு போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் சுமந்திரன், மற்றும் சிறீதரன் ஆகியோர் வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் ஏட்டிக்குப் போட்டியான பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

வியாழக்கிழமை சுமந்திரன் திருகோணமலைக்குச்சென்று கூட்டங்களை நடத்தியிருந்த நிலையில் சிறீதரன் வெள்ளிக்கிழமை திருகோணமலைக்குச் சென்று கூட்டங்களை நடத்தியுள்ளார்.

இதனையடுத்து ஏனைய மாவட்டங்களிலும் அவ்விதமான கூட்டங்களுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறிருக்கையில், கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மத்திய குழுக் கூட்டத்தைக்கூட்டுமாறு பதில்பொதுச்செயலாளருக்கு அறிவித்துள்ளநிலையில்அக்கூட்டத்தைஆரம்பத்தில் 16ஆம் திகதி வவுனியாவில் நடத்துவதற்கு முனைப்புச் செய்யப்பட்டபோதும் தற்போது 20ஆம் திகதி திருகோணமலையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பதுளை, நுவரெலியா மாவட்ட மதுச் சாலைகளுக்குப் பூட்டு

தைப்பொங்கல் தினமான இன்று (திங்கட்கிழமை) பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் உள்ள மதுபான சாலைகளை மூடுமாறு மதுவரித் திணைக்களம் பதுளை மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அ. அரவிந்குமார் தெரிவித்துள்ளார் .

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்; -

தமிழர்களின் புனித திருநாளான தைப்பொங்கல் தினத்தன்று மூட நடவடிக்கை எடுக்குமாறு மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் தாம் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, பணிப்பாளர் நாயகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதன்மூலம் மதுவற்ற பொங்கல் திருநாளை கொண்டாட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் இயங்கும் மதுபான சாலைகளில் அதிகமானதோட்டப்புறஇளைஞர்களே கடமையாற்றி வருகின்றனர். அவர்கள் தமது குடும்பங்களுடன் பண்டிகையை கொண்டாடி மகிழ வாய்ப்புஏற்பட்டுள்ளது. - என்றார். (05)

# மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் கல்லால் தாக்கப்பட்டு ஒருவர் சாவு

நெலுவ, தும்மலஹேன பிரதேசத்தில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில்கல்லால்தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் நெலுவ, தும்மலஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபராவார்.

இவர் வெள்ளிக்கிழமை தனது நண்பருடன் மதுபானம் அருந்திக் கொண்டிருக்கும்போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போதுசந்தேகநபர்உயிரிழந்தவரை கல்லால் தாக்கியதில் காயமடைந்தநபர்சம்பவஇடத்திலேயே உயிரிழந்துள்ளார்.இதனையடுத்து சந்தேக நபர் பொலிஸ்நிலையத்தில் ஆஜராகிய நிலையில்பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெலுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# துறைமுகத்துக்குச் சென்றதால் நான் மகிழ்ச்சியுடன் உள்ளேன்

## திஸ்ஸ குட்டியராச்சி களிப்பில்



பொருளாதாரப்பாதிப்பால்நாட்டுமக்கள்உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசியலில் எவ்வாறான தீர்மானம் எடுப்பார்கள் என்ற அச்சம் எமக்கு உள்ளது. இருப்பினும் கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயாராகவுள்ளோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியராச்சி தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் போட்டியிட கட்சி என்ற ரீதியில் உள்ளோம்.ஆனால் பொருளாதார பாதிப்பால் மக்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் மக்கள் எவ்வாறு அரசியல் தீர்மானத்தை எடுப்பார்கள் என்ற அச்சம் எமக்கு உண்டு.

வரலாற்று காலங்களில் அரசியல் ரீதியில் நாட்டு மக்கள் எடுத்த தீர்மானங்களை கொண்டு இந்த அச்சம் தோற்றம் பெற்றுள்ளது.

தேசிய விவசாயத்துறையை மேம்படுத்த முன்னாள்பிரதமர்சிறிமாவோபண்டாரநாயக்க மூடிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

மூடிய பொருளாதார கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஜே.ஆர்.ஜயவர்தனா தலைமையில் அரசாங்கத்தைத் தோற்றுவித்தனர்.

ஜே.ஆர்.ஜயவர்தன மூடிய பொருளாதாரத்தை இரத்து செய்து திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தினார்.நாட்டு மக்கள் பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்மானங்களை எடுத்துள்ளார்கள்.

ஆளும்தரப்பின்உறுப்பினர்கள்துறைமுகத்துக்கு சென்றமை தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. பொருளாதாரப் பாதிப்பு என்பதால் அழுது கொண்டிருக்க முடியாது.

மகிழ்வுடன்இருக்கவேண்டும்.துறைமுகதத்துக்கு சென்றதால் நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். - என்றார்.(05)

# மின்கட்டணத்தை குறைக்க பெப்ரவரியில் நடவடிக்கை

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தகவல்

மின்கட்டணம்திருத்தம்தொடர்பான யோசனையை மின்சார சபை நேற்று (சனிக்கிழமை) முன்வைத்துள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள தரவுகளை மீளாய்வு செய்து, சிவில் மற்றும் பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் மின்கட்டணம் திருத்தம்தொடர்பானஅறிக்கைமின்சார சபையிடம் சமர்ப்பிக்கப்படும் என பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அதிகளவான மழை வீழ்ச்சி கிடைத்துள்ள நிலையில் நீர்மின்னுற்பத்தியின் ஊடாக அதிகளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால்மின்கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனையை மின்சார சபை பொதுப்பயன்பாடுகள் ஆனைகுழுவிடம் முன்வைத்துள்ளது. மொத்த மின்கட்டணத்தை 3.34 சதவீதத்தால் குறைக்க மின்சார சபை பரிந்துரைத்துள்ளது.

30 இற்கும் குறைவான மின்னலகைப் பாவிக்கும் மின்பாவனையாளர்களின் மாதக் கட்டணத்தை 8.3 சதவீதத்தாலும், 120 இற்கும் குறைவான மின்னலகைப் பாவிக்கும் பாவனையாளர்களின் மின்கட்டணத்தை 05 சதவீதத்தால் குறைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண குறைப்பு தொடர்பில் மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைகள் நகைப்புக்குரியது என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின்முன்னாள்தலைவர் ஜனகரத்நாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

மின்சார சபை கடந்த ஆண்டு 60 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ள நிலையில் மின்கட்டணத்தை பகுதியளவில் குறைப்பதற்கு பதிலாக ஒற்றை இலக்க சதவீதத்தில் குறைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளமை இந்த ஆண்டுக்கானசிறந்தநகைச்சுவையாக கருதவேண்டும். - என்றார்.

மின்கட்டணம்திருத்தம்தொடர்பில் மின்சார சபை முன்வைத்துள்ள தரவுகளைபரிசீலனைசெய்துஎதிர்வரும் மாதளமவில் மின்கட்டணத்தைக் குறைப்பதற்கு அனுமதி வழங்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது. (05)

# தொடருந்துடன் விபத்தை தவிர்க்க கெப்பிலிருந்து பாய்ந்தவர் காயம்

வெலிகந்தை ரயில் நிலையத்திற்கு அருகில் பயணித்த கெப் வாகனம் ஒன்று ரயிலில் மோதி இடம்பெற்ற விபத்தில் சாரதி காயமடைந்துள்ளார் என வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்வெலிகந்தை-மொனராதென்ன பிரதேசத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

மட்டக்களப்பில் இருந்து பொலன்னறுவை நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது கெப் வாகன சாரதி காயமடைந்த நிலையில், சாரதியின் மனைவி தனது உயிரைக் காப்பாற்ற வாகனத்திலிருந்து வெளியே குதித்து உயிர் தப்பியுள்ளார்.

இந்நிலையில், காயமடைந்தவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என வெலிக்கந்தை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
DOWNLOAD PASSENGER APP
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY
REGISTER & BOOK
YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 0706563213
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# பொங்கலோ பொங்கல் என ஆனந்தமாய் கொண்டாடி அகமகிழ்வோம் வாருங்கள்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

' தைபிறந்தால் வழிபிறக்கும் ' என்று தமிழர்கள் சொல்லுவது வழக்கமாகும். அந்த வழக்கம் மனத்தில் புத்துணர்வையும் , உத்வேகத்தையும் , உவந்தளிக்கும்.

**' தை பொறந்தால் (பிறந்தால்) வழி**
**பிறக்கும் தங்கமே தங்கம்**
**தங்கச் சம்பா நெல் விளையும்**
**தங்கமே தங்கம்**
**முத்துச் சம்பா நெல்லு குத்தி தங்கமே**
**தங்கம்**
**முத்தத்திலே சோறு பொங்கி தங்கமே**
**தங்கம்**
**குத்து விளக்கேத்தி வச்சு (வைத்து)**
**தங்கமே தங்கம்**

கொண்டாடி மகிழ்ந்திடுவோம் தங்கமே தங்கம் ' - என்னும் இந்தப் பாடல் மனமகிழ்ந்த பொங்கலை, மலர்ந்த பொங்கலை , மண்வாசனை தரும் பொங்கலை , உயிர்த்துடிப்பான பொங்கலை , கலாசாரம் பண்பாடு கலந்த பொங்கலை நினைவூட்டிகிறதல்லவா ? இப்படி ஒரு காலம் இருந்தது. ஆனால் அப்படி ஒரு காலம் வரவேண்டும் என்பதுதான் எல்லோரினதும் பேராவலும் ஆகும்.

**' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை**
**செய்வோம் - வீணில்**
**உண்டு களித்திருப்போரை நிந்தனை**
**செய்வோம் '**


**' உழுதுண்டு வாழ்வார்க்கு**
**ஒப்பில்லைக் கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு '**
**' சேற்றில் கால் வைக்காவிட்டால்**
**சோற்றில் கைவைக்க முடியாது**

' இவையெல்லாம் பொங்கலை மன
மிருத்தும் அமுத வாக்குகள்.

பொங்கல் என்றாலே உற்சாகம் பிறந்துவிடும். புத்தாடை வாங்குவது ! புதுப்பானை வாங்குவது ! சர்க்க ரையும் , தேனும், நெய்யும் , பருப்பும் , பாலுந்தான் முன்னால்வந்து நிற்கும். கூடவே பழங்களும், கரும் பும் சேர்ந்து விடும் ! இவை அனைத்தும் ஒன்றாய் இணையும் விழாவினைப் பற்றி அறிவது அவசியம் அல்லவா? அந்த விழாவின் உட்கருத்தை அறிவோமா ? வாருங்கள் !







தைமாதத்தின் தொடக்கத்தில் இந்த விழா ஏன் கொண்டாடப்படுகிறது ? இந்த விழாவினை யாரை மையப்படுத்திக் கொண்டாடுகிறோம் ? இந்த விழாவின் அடிப்படை எதனை உணர்த்துகிறது ? இந்த விழாவில் தமிழரின் எத்தகைய பண்பாட்டு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன ? பொங்கல் என்றால் புது உடைகள் வாங்குவோம். பொங்குவோம். தொலைக்காட்சியில் நடக்கும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்போம். அத்துடன் பொங்கல் விழா நின்றுவிடும். இதுவல்ல பொங்கல் !

உழைப்பு என்பதுதான் சமுதாயத்தின் அடிப்படை. அந்த உழைப்பில் பங்கு கொள்ளும் அனைவரும் வாழ்த்தப்பட வேண்டியவர்களே. உழைப்புக்கு உதவும் மனிதர்கள், உழைப்புக்கு உதவிடும் விலங்குகள்,உழைப்புக்குஉதவிடும்கருவிகள் கவனத்தில் கொள்ளப்படுவதுதான் சமூதாய அறமாகும். அப்படியான ஒரு அறத்தினை வலியுறுத்தத்தான் தைப்பொங்கலைக் கொண்டாடுகிறோம் என்பதை மனமிருத்தல் வேண்டும்

உலகிலே உயிர்வாழ்வதற்கு வெப்பம் முக்கியமானது. காற்று முக்கியமானது நீர் முக்கியமானது. உணவு முக்கியமானது. இவற்றுக்கெல்லாம் இறை அம்சம் கொடுத்து அவற்றை சமூகத்தின் உயர் நிலையில் வைக்கும் வழக்கம் நெடுங் காலமாக இருந்து வருகிறது. இவையாவும் தைப்பொங்கலுடன் இணைவதால்த்தான் பொங்கல் சிறப்பான விழாவாக அமைகிறது எனலாம்.

விவசாயம் என்பதுதான் சமூகவாழ்வுக்கு முதுகெலும்பாகும். விவசாயம் கொண்டு வருகின்ற பொருட் களால்த்தான் சமூகத்தில் மக்களின் அன்றாட வாழ்வே சிறப்பாகிறது. அந்தவிவசாயத்தைச் செய்பவன் இந்தப் பொங்கலில் போற்றப் படுகின்றான். அந்த விவசாயிக்கு உதவும் மாடுகள் பூசிக்கப்படுகின்றன. விவசாயத்தை செழிப்பாக்கும் சூரியன் வணங்கப்படுகிறது. விவசாயத் துக்கு உதவும் கருவிகள் மதிக்கப் படுகின்றன. இதனால் தைப்பொங்கல் என்பது நன்றியினை நவில்கின்ற பெருவிழா அமைகிறது என்பது முக்கிய கருப்பொருள் எனலாம்.

தையில் அறுவடை செய்த புத்தரிசிகொண்டுபுதுப்பானையில் பாலும் சர்க்கரையும் சேர்த்து மண்பா னையில் பொங்கி மகிழும்பொழுது பொங்கிவரும்பாலினைப்பார்த்து குடும்பத்தில் உள்ளார்கள் ' பொங் கலோ பொங்கல் என்று மகிழ்ந்து நிற்கும் நிலையினை எங்கள் பிள்ளைகளின் உள்ளத்தில் இருக்கச்செய்வது மிக இன்றியமையாததாகும்.

கலப்படம் இல்லாமல் யாவுமே உழைப்பின் பயனாக வந்த அரிசி, பால், சர்கரை, கரும்பு, இஞ்சி, மஞ் சள், வாழை, மாவிலை, இவையெல்லாம் மகிழ்ச்சியின் அடையாளங்கள். மனித சமூகத்தின் மாண்பின் அடையாளங்கள் எங்களின் பண்பாட்டின் அடையாளங்கள். இவைகள் தைப்பொங்கலில் பயன் படுத்தும் பொழுது ஏற்படும்மனநிறைவுக்குஈடுஇல்லைஎனலாம்.

கூட்டுறவின்மகத்துவம்தைப்பொங்கலின் சிறப்பாகும். மனிதனும் விலங்குகளும் கூடி உழைத்து அதன் பயனாக வெளிப்படும் ஒரு கூட்டுறவுத் திருநாள் என்றுகூட தைப்பொங்கலை எடுத்துக் கொள்ளலாம். வருடத்தின் தொடக்க மாய்வரும் தையினை மங்களகரமாக வரவேற்க வேண்டு மென்று எண்ணி பொங் கல் திருநாளினை ஏற்படுத்திய எங்களின் முன்னோர்களை நாங்கள் வாழ்த்தாமல் இருந்திட முடி யுமா? வருடத் தொடக்கத்தில் மனதில் ஏற்படும் எண்ணங்கள்தான் அந்த வருடம் முழுவதையும் மகிழ் வுடன் வாழவைக்கும் என்று எண்ணிய உளவியல் சிந்தனையை உவந்தேற்ற வேண்டாமா ?

பொங்கலின் முதலில் மார்கழியின் நிறைவில் போகி என்றொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. போகி என்றால் பழைய விஷயங்களை பழைய பொருட்களைக் களைந்து விடுவதாகும். அடுத்து பொங் கல் வருகிறது. பழைய பொருட்களை எரித்து விடுவதைத்தான் போகியில் காண்கிறோம், உண்மையில் இதன் அர்த்தம் அதுவன்று. எங்கள் மனதிலுள்ள பொறாமை வஞ்சகம். பொய், கபடு, சூது, வாது, இவற்றை யெல்லாம் ஞானம் என்னு. தீயில் பொசுக்கி மனதைத் தூய்மை ஆக்கி புத்தாடை உடுத்து புதுப்பொங்கலை சுவையாக உண்டு புத்துணர்வு பெற்று நிற்கவேண்டும் என்பதுதான் இதன் தாற்பரியம் எனலாம்.

பொங்கலுக்கு அடுத்து மாட்டுப் பொங்கல் வருகிறது. விவசாயத்துக்கு உதவிய மாடுகளுக்கும், பால் தந்து எம்மை வாழ்வித்த பசுக்களுக்கும் நன்றி நவிலும் நாளாக இது அமைகிறது. அடுத்த நாள் காணும் பொங்கல் அமைகிறது. உற்றார் உறவினரை, பெரியவர்களைக் கண்டு அவர்களின் வாழ்த்தினை ஆசியி னைப் பெற்றுக் கொள்ளும் நாளாக இந்த நாளை அமைத்து மகிழ்கின்றார்கள்.



மாட்டுப்பொங்கல், போகித்திருநாள், காணும்பொங்கல் இவைபற்றி எல்லாம் நகரித்தில் வாழ்கின்றவர்க ளுக்கோ. புலம்பெயர்பகுதிகளில்வாழ்கின்றவர்களுக்கோ தெரியவருவது குறைவாகும். பொங்கலைக் கூட குக்கரில் பொங்கி தாங்கள் இருக்கும் வீட்டின் அடுப்படியில் வைத்து கரண்டியால் இரண்டு கரண்டி அவசர அவசரமாக வாயில் போட்டுவிட்டு வேலைக்கு ஓடும் நிலையினைதான் பொங்கல் நன்னாளில் காண்கின்றோம்.மாடிக் குடி இருப்புகளில் வாழ்கின்றவர்களின் பொங்கலை நினைத்துப் பார்க்கவே பரி தாப மாகவே இருக்கும்.

சமயம் கடந்த விழாவாக தமிழர் விழாவாக தைப்பொங்கல் விளங்குகிறது என்பதுதான் இந்த விழாவின் மிகச் சிறப்பு எனலாம். உலகில் வாழுகின்ற தமிழர்கள் - கிறீஸ்தவராயினும், இந்துக்களாயினும் , தைப் பொங்கலை மகிழ்வுடன் ' பொங்கலோ பொங்கல் ' என்று பொங்கும் மனத்துடன் கொண்டாடி மகிழ்கி றார்கள். சமயச்சாயம் பூசப்படாத தமிழர் திருநாளாய் தைப்பொங்கல் திகழ்கிறது என்பது தமிழருக்கெல்லாம் மிகவும் பெருமையான விஷயம் அல்லவா ! நன்றி நவிலும் விழா ! உழைப்பாளரின் உன்னத விழா ! கூட்டுறவின் விழா ! மதபேதமற்ற மகோன்னத விழா ! எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் நிறை என்னும் விழா ! எனவே பொங்கலோ பொங்கல் என்று ஆனந்தமாய் கொண்டாடி அகமகிழ்வோம் வாருங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# பொங்கலோ பொங்கல் !




மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்-. ஆஸ்திரேலியா

தைபிறந்து விட்டாலே தங்கமே தங்கம்
தளர்வகன்று போயிடும் தங்கமே தங்கம்
பொங்லென்று சொன்னாலே தங்கமே தங்கம்
புத்துணர்வு பிறந்திடுதே தங்கமே தங்கம்

நன்றி சொல்லும் பெருவிழாதான் பொங்கலாகுமே
நாளுதிக்கும் சூரியயனே நமக்கு ஆதாரம்
உழவதனை உளமிருத்தும் உயர்ந்த விழாவே
உயர்வான எங்களது பொங்கல் விழாவே

வாசலிலே கோலமிட்டு வாழை கட்டியே
மஞ்சளிஞ்சி கரும்புமதில் சேர்த்துக் கட்டியே
தோரணமாய் அலங்கரித்து வீட்டு வாசலில்
தொடங்கிடுவோம் பொங்கிவிட விளக்கு ஏற்றியே

வீட்டிலுள்ள அனைவரு மதிகாலை எழும்பியே
விரைவாக நீராடி புத்தாடை அணிந்துமே
பொங்கல் பொங்க புறப்படுவோம் பூரிப்பாகவே
மங்கலமாய் பெற்றவர்கள் மகிழ்ந்து நிற்பார்கள்

பொங்கற்பானை அடுப்பினிலே ஏற்றி வைத்ததும்
அக்கினையை மூட்டிவிடப் பாட்டி வந்திடுவா
அரிசி பருப்பு சர்க்கரை அனைத்தையையுமே
அம்மாயங்கே ஒழுங்காய்க் கொண்டு வந்திடுவா

பானையிலே பாலையூற்ற தாத்தா வந்திடுவார்
பாட்டியோடு அம்மாவோடு நாமும் ஊற்றுவோம்
பொங்கிவரும் வேளைக்காக காத்து நின்றுமே
அரிசியுள்ளே போடுதற்கு ஆவல் கொள்ளுவோம்

பொங்கிவரும் பாலைப்பார்க்க பூரிப் பெய்துவோம்
அரிசியினை கையெடுத்து அனைவரும் போடுவோம்

பொங்கிலினை பெருவிருப்பாய் மனதில் எண்ணியே
பொங்கலோ பொங்கலென்று சொல்லி மகிழுவோம்

அரிசிவெந்த பின்னரம்மா சர்க்கரை போடுவார்
அக்கம்பக்கம் பொங்கல்மணம் காற்றில் கலந்திடும்
பானைநிறைய பொங்கலெம்மை பார்த்துச் சிரித்திடும்
அம்மாவுடனே பொங்கலினை இறக்கி வைத்திடுவார்

கோலமிடை வாழையிலை அம்மா வைத்துமே
பொங்கலினை பக்குவமாய் படைத்து மகிழுவார்
அந்தவேளை ஆதித்யன் ஆசி வழங்குவான்
அனைவருமே அவனை வணங்கி ஆசிவேண்டுவோம்

தம்பிதங்கை பட்டாசை வெடித்து மகிழுவார்
தாத்தாபாட்டி தூரநின்று கேட்டு மகிழுவார்
அப்பாவம்மா அனைத்தையுமே பார்த்து மகிழுவார்
ஆனந்தமாய் பொங்கலங்கே பொங்கி ஒளிருமே

தாத்தாபாட்டி கால்களிலே விழுந்து வணங்குவோம்
ஆசிகூறி காசுதந்து வாழ்த்தி மகிழுவார்
அப்பாவம்மா ஆசிதந்து அணைத்து நிற்கையில்
ஆனந்தமே எங்களுக்குள் பெருகி நின்றிடும்

பொங்கலன்று அனைவருமே கோவில் செல்குவோம்
எல்லோர்வாழ்வும் சிறப்புறவே இறையை வேண்டுவோம்
ஆலயத்தில் பக்குவாய் அனைத்தும் நடந்திடும்
ஆண்டவனின் நினைப்புடனே வீடு திரும்புவோம்

பொங்கலினை மற்றவர்க்கும் கொடுத்து மகிழுவோம்
தருகின்ற பொங்கலினை ஏற்றும் மகிழுவோம்
உறவுகளைப் பார்ப்பதற்கு உவப்பாய்ச் செல்குவோம்
உடனிருந்து பொங்கலினை உண்டு மகிழுவோம்

பொங்கலெனும் வார்த்தையது பொருள் பொதிந்தது
மங்கலத்தை மாநிலத்தில் பதித்து நிற்பது
எங்கணுமே இன்பமதைப் பெருக்கி நிற்பது
இனிப்போடு உறவுகளை இணைக்கச் செய்வது

## காரிய காலம்...!

சமத்துவ காலமதை
'சமத்காரப்' பேர்வழிகள்
சாதுரியமாய் வெல்வார்!

மனிதப் பதர்கள் மட்டும்
விதியை தினம் நொந்து
மரம் போலே கிடப்பர்!

கொக்காகக் காத்திருந்து
கனிந்து வரும் காலத்தில்
காரியம் முடித்திடுவர்
வீரியப் பேர் வழிகள்..!

பேரத்துக்கு இடமில்லா
நேரிய நேர வரம்
பருவத்தே பயிர் செய்யப்
பண்பட்ட வளமாகும்..!

-இரா.ஜெயக்குமார்-

## தேர்தல் திருவிழா...!

வருட இறுதியிலே
வருகிறதாம் பெருவிழா!
அதிகாரப் பெருமகனை
தேர்வு செய்யும் ஒரு விழா!

உச்ச நீதிமன்றத்தார்
படுகொலைப் பாதகர்க்கு
பரிந்துரைத்த மரணத்தை
வரிந்து கட்டி நீக்கும்
வல்லவரை தெரிவு செய்யும்
வல்லரசும் அந்தரிக்கும்
நல்லரசுத் திருவிழா!

'வரியாட்சி வல்லவராம்
நரியாரே நம் தலைவர்'
பிரியா நலம் நாடும்
கோடரிக் காம்பார் கூற..

பகிஸ்கரிப்பே பாதையென
தனிப்பாதை செல்கின்ற
விண்ணனின் பேரன் கூற..

ஆட்டம் காணுகின்ற
ஆதிக்க தமிழ்க்கட்சி
அமைதியாய் குழி பறிக்க..

மொழி வழி இணைந்த இனம்
ஐக்கியப்பட்டு வெல்ல
அற்புத வாய்ப்பு வர...
சிதறாமல் வாக்களிக்க
பொது வேட்பாளர் தனை
நிறுத்தாத நிலை வருமோ?
மாற்றார்க்கு வாக்களித்து
மலினப்படல் தொடருமோ?
தேடிவரும் தேர்தல் வாய்ப்பும்
ஓடி எமக்கு ஒழித்திடுமோ?

- இரா.ஜெயக்குமார்-

## "புதியதோர் திருப்பத்தை நோக்கி நகர்வோம்"

### இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் வாழ்த்து



தமிழர்களின் பண்பாடுகளில் ஒன்றாக விளங்கும் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் அனைவரது வாழ்விலும் அன்பும், அமைதியும், நலமும், வளமும் பெருக வாழ்த்துகின்றேன் என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும்கிராமியவீதிகள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன்.

எமது நாடு தற் போது பொருளாதார நெருக்கடியிலிருந்துஓரளவுமீண்டெழ முயற்சிக்கும் தருணத்தில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களும் ஆங்காங்கே நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. அந்த வகையில் தற்போது ஏற்பட்டுள்ள பருவகால மழைவீழ்ச்சி அதிகரிப்பினால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கு எமது மக்களை அதிகம் பாதிக்கிறது துரதிஸ்டமே. இச் சூழலில் இயற்கை அன்னைக்கும் உலகத்தார் அனைவருக்கும் அச்சாணியாக விளங்கும் உழவர் பெருமக்களுக்கும் அவர்களுக்கு துணைபுரியும் உயிரினங்களுக்கும் நன்றி கூறும் விதமாகக் கொண்டாடப்படும் இத்தைத் திருநாளில் நாம் அனைவரும் புதியதோர் நம்பிக்கையோடு பயணிக்க இந்நாளை துணை கொண்டு செயற்பட நாம் திடசங்கர்ப்பம் பூணவேண்டும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' வழி பிறந்தால் எம் மக்கள் வாழ்வு சிறக்கும், எமக்கான அரசியல் தீர்வு கிடைக்கும், என்று எம் மக்களை காலங்காலமாக ஏமாற்றி வரும் தமிழ் அரசியல் தலைமைகள் தற்போது தங்களது தலைமைத்துவப் போட்டியிலே தீர்வின்றி தவிர்ப்பது வேதனையளிக்கிறது. இவ்வாறானவர்களாஎமதுமக்கள்பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குபவர்கள்? அது இனி ஒருபோதும் நிகழவே நிகழாது.

இப்படியான தலைவர்களை மக்கள் இன்னும் இன்னும்நம்பிஏமாறாமல்,"உழைப்பால்உயர்வோம்" என்ற சிந்தனையடிப்படையில் செயற்பட்டு எமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு, எதிர்கால எமது சந்ததியினரின் எதிர்காலத்தினையாவது பயனுள்ளதாகமாற்றஎல்லாம்வல்லஇறைஆசியோடு இந்நன்னாளிலேநாம்அனைவரும்ஒன்றிணைந்து பயணித்துபுதியதோர்திருப்பத்தைநோக்கிநகர்வோம் என உங்கள் அனைவரையும் அழைப்பதோடு, அனைவருக்கும்இத்தைத்திருநாளில்சகலவிதமான ஐஸ்வரியங்களும் கிடைக்க வேண்டும் என மீண்டுமொரு வாழ்த்துகின்றேன்.

## இந்தப் பொங்கலுடனாவது நிரந்தரத் தீர்வு கிட்டட்டும்

### காரைதீவு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் வாழ்த்து



(வி.ரி.சகாதேவராஜா)

இயற்கையோடு இயைந்து இயற்கைக்கு உளப்பூர்வ நன்றி பாராட்டி-உழைப்பின்உன்னதத்தைப் போற்றுவது தமிழர் கொண்டாடும் தைப் பொங்கல் விழாவின் உன்னதநோக்கமாகும். அப்படிப்பட்ட புனித நாளில் தமிழர்வாழ்வில் நீண்டகாலமாகபுரையோடிப் போயிருக்கும் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வானது இந்த வருடப்பொங்கலுடனாவது எட்டப்படவேண்டும்என காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கே.ஜெயசிறில் தனது பொங்கல் வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி இத்தரணியெங்கும்பொங்கவேண்டும். பொங்கல்என்பதற்குசாப்பிடும்பொங்கல் என்றுபொருள் அல்ல. பொங்கிப்பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

சூரியனை வழிபடுவதால் உலகில் அடைய முடியாதவையே கிடையாது. வேதம் கதிரவனைப் பலவாறும் புகழ்கிறது. 'நாஸ்திகர்களாலும் இல்லை என்று கூற முடியாத கடவுள் சூரிய பகவானே' என்பதை வேதம் கூறுகிறது. அப்படிப்பட்ட சூரியபகவானுக்கு நன்றி கூறுகின்ற இந்நாளில் சகலரது வாழ்விலும் நன்றியுணர்வு ஏற்படவேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# அழுத்தங்களுக்கு அடிபணியோம் யுத்திய நடவடிக்கைகள் தொடரும்

## அமைச்சர் டிரான் அறிவிப்பு

சர்வதேச, உள்நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து போதையொழிப்புக்கான யுக்திய நடவடிக்கையை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டிர்க் மற்றும் உள்நாட்டு சிவில், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் போதையொழிப்பு தொடர்பில் முன்னெடுத்து வரும் யுக்திய நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில்எதேச்சதிகாரமாகசெயற்படுகின்றமை தொடர்பில்சுட்டிக்காட்டிகுறித்தநடவடிக்கைளில் பாதுகாப்புத் தரப்பினரை ஈடுபடுத்துவது தொடர்பில் மீளாய்வுசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளமை குறித்து வினவியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் விநியோகத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் குறித்த செயற்றிட்டம் கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் கணிசமான அளவில் போதைப்பொருள் கடத்தல்களில் பங்கேற் பவர்கள், விற்பனைகளில் ஈடுபடுபவர்கள் உள்ளிட்டவர்களின் சொத்துக்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்விதமான நடவடிக்கை தொடரும் பட்சத்தில் குறுகிய காலத்தில் போதைப்பொருள்களை ஒழித்த நாடாக இலங்கை உருவெடுக்கும் என்பதில் எனக்கு தீவிரமான நம்பிக்கை உள்ளது.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு போதையொழிப்பு முக்கிய விடயமாக இருக்கின்றது.

ஆகவே இந்தச்செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

மனித உரிமைகள் உள்ளிட்ட வெள;வேறு பெயர்களில் உள்நாட்டிலோ, சர்வதேசத்திலோ என்மீது அழுத்தங்கள் பிரயோகிப்பதற்கு முனைந்தால் அதற்கு அடிபணியப்போவதில்லை.

முன்னதாகவே, நாட்டில் உள்ள இராஜதந்திரிகள் என்னுடன் இந்த விடயங்கள் சம்பந்தமாக உரையாடியுள்ளனர். அவர்கள் இந்த கடுமையான நடவடிக்கையை தளர்த்துமாறு கோரினார்கள்.

ஆனால் போதைப்பொருளால் எமது நாட்டின் எதிர்காலசந்ததியினரே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதுடன் பாரிய ஆபத்துக்களை அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளேன். என்மீது அழுத்தங்கள் பிரயோகிப்பதற்கு முனைந்தால் அதற்கு அடிபணியப்போவதில்லை.

முன்னதாகவே, நாட்டில் உள்ள இராஜதந்திரிகள் என்னுடன் இந்த விடயங்கள்சம்பந்தமாக உரையாடியுள்ளனர். அவர்கள் இந்த கடுமையான நடவடிக்கையை தளர்த்துமாறு கோரினார்கள்.

ஆனால்போதைப்பொருளால்எமதுநாட்டின் எதிர்காலசந்ததியினரேபாதிக்கப்படுகின்றார்கள் என்பதிலுள்ள பாரிய ஆபத்துக்களை அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளேன்.

ஆகவே, நான் தற்போதுள்ள



பதவியில் நீடிக்கும் வரையில் நிச்சயமாக போதைப்பொருளுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பேன்.

போதைப்பொருளற்ற நாட்டை மீளமைப்பதற்காக எனது அர்ப்பணிப்புக்கள் தொடரும். இந்த முன்னெடுப்பில் அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்கும் அதேநேரம், விமர்சனங்களை கண்டு பின்வாங்கப்போவதில்லை. - என்றார்.(05)

# போலி மாணிக்க கல் வைத்திருந்தவரும் விடுவிக்க லஞ்சம் வழங்கியவரும் கைது

யுக்திய நடவடிக்கையில் போலி மாணிக்கக்கல் மற்றும் தங்கங்களை வைத்திருந்தவரும் கைதான நபரை விடுதலை செய்ய பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்தவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாவத்தகமையைச் சேர்ந்த 51 மற்றும் 45 வயதுடையவர்களாவர்.

யுக்தியநடவடிக்கையின்போதுமேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில்கைதுசெய்யப்பட்டவரைவிடுதலை செய்வதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக வழங்கியவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் தனர். (05)

# போலித் தகவல் வழங்குவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள்



நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகளையும் இந்த இலக்கத்துக்கு வழங்க முடியும்.

வழங்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை சிறப்பு குழுவின் கீழ் இடம்பெறும்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சால் ஸ்தாபிக்கப்பட்ட 118 என்ற பொலிஸ் துரித இலக்கத்துக்கு வழங்கப்படும் தவல்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சகர்நிஹால்தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய பாதுகாப்பிற்கு

அதேநேரம், போலியான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (05)

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த அதிரடிப்படை கான்ஸ்டபிள் கைது

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் விசேட அதிரடிப்படை கான்ஸ்டபிள் ஒருவர் மாத்தறை பொல்ஹேனவில் வைத்து கைது செய்யப்பட்டார் என மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பசறை முகாமில் கடமையாற்றியவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விடுமுறையிலிருந்த இந்த கான்ஸ்டபிள், ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தபோது கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (05)

# அம்பாந்தோட்டைக் கடலில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு

கடலில்நீராடச்சென்றமாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அம்பாந்தோட்டை துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டை தர்மபால மாவத்தையைச்சேர்ந்த15வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் கடலில் மூழ் குவதைக் கண்ட பிரதேசவாசிகள் உடனடியாக அவரை மீட்டு அம்பாந்தோட்டை பொது வைத்திய சாலையில்சேர்த்தபோதும்மாணவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (05)

# குடாநாட்டுக்கு இன்று நீதி அமைச்சர் வருகை



யாழ்ப்பாணம் காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா இன்று (திங்கட்கிழமை) இடம்பெறவுள்ளது.

தேசியஒருமைப்பாட்டுநல்லிணக்க அலுவலக இணைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில், நீதிஅமைச்சர்விஜயதாராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன்காலை10மணிக்கு இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வு வியாவில் வாழ் மக்கள் வர்த்தக சமூகத்துடன் வெளிநாட்டு வாழ் உறவுகளும் இணைந்து சிறப்பாக இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் பங்கேற்பதற்காகவே நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். (05)

# இலகு ரயில் திட்டத்தினை நாம் நிச்சயம் ஆரம்பிப்போம்

## ஜப்பான் நிதி அமைச்சரிடம் எதிர்க்கட்சி தலைவர் உறுதி

ராஜபக்ஷ அரசாங்கத்தில் எவ்வித அடிப்படைக்காரணங்களும் இன்றிஇடைநிறுத்தப்பட்ட இலகு ரயில் திட்டத்தைத் தமது ஆட்சியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜப்பான் நிதி அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வவிஜயம் மேற்கொண்டிருந்த ஜப்பானியநிதியமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸ ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.



ஜப்பான் தனது பொருளாதாரத்தின் விரைவான தொழில்மயமாக்கல் மூலம் அதன் ஏற்றுமதித் துறையை எவ்வாறு மேம்படுத்த முடிந்தது என்பது உட்பட இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் ஜப்பானின் புனரமைப்பு அனுபவத்திலிருந்து இலங்கை பாடங்களைக் கற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றியும் சஜித் பிரேமதாஸ இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இலகு ரயில் திட்டத்தை திடீரென இரத்துச் செய்வதற்கு முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம் எடுத்த தொலைநோக்குப் பார்வையற்ற தீர்மானத்திற்கு தனது வருத்தத்தைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமது கட்சியின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கத்தில் இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ஜப்பான் நிதியமைச்சரிடம் உறுதியளித்தார்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் அல்லது ஜெய்க்கா நிறுவனத்திடம் இருந்து பல வருடங்களாக பெற்ற ஒத்துழைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஜப்பான் நிதி அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார். ஜப்பானின் வட பகுதியில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜப்பானிய மக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்தார். (05)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
World Vision
SMILEzone
CCH
Sustainability Partner
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
ஒழுங்கமைப்பாளர்
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# ஒருகொடவத்தையில் கார்மோதி ஒருவர் சாவு

## சாரதி கைது

கொழும்பு ஒருகொடவத்தை பகுதியில் கார் ஒன்று பாதசாரி மீது மோதியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கொழும்பு ஒருகொடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடையவராவார்.

தெமட்டகொடை பிரதேசத்தில் இருந்து களனி பாலத்தை நோக்கி பயணித்த கார் குறித்த பாதசாரிமீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது காயமடைந்த பாதசாரி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கார் சாரதி கைதுசெய்யப்பட்டதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒருகொடவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஸ்டார் ஹோட்டலில் இறைச்சிக்கு சீல்

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் பத்து நாள் உணவு கண்காட்சிக்காக இங்கிலாந்தில் இருந்து உரிய அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்ட 300 கிலோ மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சியை சுகாதார திணைக்களம் எடுத்துச் சென்றுள்ளது.

சுகாதாரத் துறையின் முறையான அனுமதி இல்லாததாலும், இந்த இறைச்சியை வழங்கிய ஆங்கிலேய நிறுவனத்திடம் இருந்து மனிதர்கள் உண்பதற்கு ஏற்றதா என்பதை உறுதிப்படுத்தும்சான்றிதழ் இல்லாததாலும் காவலில் வைக்கப்பட்ட இந்த இறைச்சியை விடுவிக்க சுகாதாரத்துறை மறுத்துள்ளது.

இருப்பினும், இந்த இறைச்சி கையிருப்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மாதிரி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாதிரிகளைப் பரிசோதிக்கும் வரை இறைச்சியைப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறி குளிர்பதன கிடங்குகளில் தனியாக வைக்க வேண்டும் என்ற உத்தரவின் பேரில் இறைச்சி கையிருப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கை அடுத்த சில நாள்களில் வழங்கப்படும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் விஜித குணசேகர விசாரணையில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பல நாடுகளில் பன்றிக்காய்ச்சல் பரவி வருவதால் சீனாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பன்றி இறைச்சி உள்ளிட்ட இறைச்சியை அழிக்க சுகாதார திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. (05)

# நாய்கள் சரணாலயத்திற்கு கிளிநொச்சியில் மூடுவிழா

போதிய நிதி இன்மையால் கிளிநொச்சி - பனை பிரதேசத்தில் இயங்கி வந்த நாய்கள் சரணாலயத்தை மூடுவதற்கு அதன் நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்த சரணாலயத்தில் 100 இற்கும் மேற்பட்ட தெரு நாய்களை பராமரித்து வந்ததாகக் கூறப்படுகிறது. பல சிரமங்களுக்கு மத்தியில் ஐந்து வருடங்களாக நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாய்களுக்கு போதிய சுகாதார வசதிகள் மற்றும் உணவு வழங்க முடியாத காரணத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

நாய்கள் சரணாலயத்தை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவி கிடைத்தவுடன் அதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அதுவரை நாய்களை அப்பகுதிக்கு கொண்டு வரவேண்டாம் எனவும் மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(05)




THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி

19 | 20 | 21

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds
(Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER
GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN | NIPPON CEMENT
MEDIA SPONSORS: PRINT | RADIO | TELEVISION Capital | DIGITAL காலைக்கதிர்
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY

SILVER SPONSORS: Anchor | SOORYA | Hayleys Solar | 4ever | Darley Butler | Elephant House | KELLS KREST | PHOENIX | RHINO | Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2024இல் வெளியிடப்பெற்றது.